# எதிரொலி ETHIROLI

ஆஸ்திரேலியா

குரல் 08 அதிர்வு 91 தை 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



















ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au




# அவுஸ்திரேலிய நாள் அவசியமா?

**● சியாமளா யோகேஸ்வரன்**

டிசெம்பரில் வருகின்ற நீண்ட கோடை விடுமுறை கழிந்து போக, அடுத்த விடுமுறைக்காகக் காத்திருப்பவர்களுக்கு, ஜனவரி மாதம் 26 ஆம் திகதியன்று வரும் அவுஸ்ரேலியா நாளானது மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒரு விடுமுறை தினமாகவே அமைகின்றது. இந்த நாட்டின் பூர்வகுடிகளாக இருந்த போதும், சொந்த மண்ணுக்கான உரிமையை இழந்து, அத்துமீறிக் குடிவந்தவர்களிடம் தம் வாழ்வாதாரத்தை எதிர்பார்த்து, அவல நிலையில் வாழும் அவுஸ்ரேலிய நாட்டின் பூர்வகுடிகளுக்கு இந்த ஆக்கிரமிப்பு நாளானது துக்கநாளாகவே காணப்படுகின்றது. சொந்தமண் பறிபோன தினத்தை ஆண்டு தோறும் கொண்டாடும் போது, வேதனையான நினைவுகள் மீண்டும் கிளறப்படும் என்ற சிந்தனை பகுத்தறிவாளர்களுக்கு வராமற் போவது வேதனைக்குரியதொன்று.

உலகின் பழமையானதும், தொடர்ந்து வாழும் கலாசாரத்தின் பாதுகாவலர்களாகவும் காணப்படும் பூர்வகுடிகள் 60,000 ஆண்டுகளுக்கு மேல் அவுஸ்ரேலியாவைத் தங்களின் வதிவிடமாகக் கொண்டுள்ளனர். முதல் கப்பல் வந்த போது, இன்றைய அவுஸ்ரேலியா என அழைக்கப்படும் நிலத்தில் 500 க்கும் மேற்பட்ட பூர்வகுடிக் குழுக்களும், சுமார் 750,000 பேரும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். பிரித்தானியரின் ஆளுமையாலும், பலத்தாலும் பூர்வகுடிச்சமுதாயங்கள் பாரம்பரிய மண்ணிலிருந்து அகற்றப்பட்டுக் காலனியாக்கம் நிகழ்த்தப்பட்டதில் பூர்வகுடிகளின் சனத்தொகையானது 1900 ஆம் ஆண்டளவில், 90% சதவீதத்தால் குறைக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

கப்டன் குக் அவுஸ்ரேலியாவின் வடகுயின்ஸ்லாந்தில் ஏப்ரல் 1770 ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்திருந்த போதும், 1788 ஆம் ஆண்டு, ஜனவரி 26 ஆம் திகதி ஆதர் பிலிப்ஸ் என்பவர் நியூ சவுத்வேல்ஸில் காலடி வைத்த நாளையே அவுஸ்ரேலிய நாள் என்று கொண்டாடுகின்றார்கள். கீழைத்தேய காலனித்துவ நாடுகள், பிரித்தானிய ஆக்கிரப்பின் கீழிருந்து சுதந்திரம் பெற்ற நாளை தமக்கான சுதந்திரமும், உரிமையும் கிடைத்த நாளாகக் கொண்டாடுவதில் அர்த்தமிருக்கின்றது. ஆனால் ஒரு இனத்தை அடிமையாக்கிய நாளை, சொல்லொணாத் துயரத்தின் பாதிப்பிலிருந்து இன்றுவரையில் மீண்டு வராத ஒரு சமூகத்தின் அழிவு தொடங்கிய நாளை, முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்க வேண்டுமா?

அமெரிக்கப் பூர்வகுடிகளை அடக்கி, ஆக்கிரமித்த நாளை அமெரிக்காவோ அல்லது நியூசிலாந்தைப் பிரித்தானியர் ஆக்கிரமித்த நாளை நியூசிலாந்து நாட்டினரோ வெற்றிநாளாகக் கொண்டாடாத போது, அவுஸ்ரேலியா மட்டும் அந்த நாளை, வென்ற நாளாகக் கொண்டாடுவது தொடர்வாதத்துக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றது. பல்லினங்களும் வந்தேறுகுடிகளாக மகிழ்ச்சியாக வாழும் ஒரு தேசத்தில், இந்த மண்ணுக்குரியவர்களின் வேதனை தொடர்கதையாக நீண்டு கொண்டே செல்கின்றது. அவுஸ்ரேலிய நாளை மாற்ற எடுக்கும் முயற்சியானது, பூர்வகுடிகளுக்கும் மற்றைய அவுஸ்ரேலியர்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கான ஆரம்ப முயற்சியாக அமையும் என்பது பெரும்பாலானோரின் கருத்தாக இருக்கின்றது.

சில நகரசபைகள் அவுஸ்ரேலிய நாளை இன்னொரு தினத்துக்கு மாற்றுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. அவுஸ்ரேலிய கிரிக்கெட் வாரியமானது அவுஸ்ரேலிய நாளுக்கான துடுப்பாட்டம் என்ற சொற்பதத்தை தவிர்த்து, அந்த விடுமுறை நாளுக்கான துடுப்பாட்ட விளம்பரத்தை மேற்கொண்டு வருகின்றது. அவுஸ்ரேலியக் குடிமக்களில் மூன்றில் ஒரு பாகத்தினர் அவுஸ்ரேலிய நாளை மாற்ற வேண்டும் என்றும், 56 சதவீதத்தினர் இவ்விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான தீர்வுகளை எடுக்காமல், நாளை மட்டும் மாற்றுவதில் எந்தப் பயனுமில்லை என்றும் கூறியிருக்கின்றார்கள்.

இன்னமும் அவுஸ்ரேலிய மண்ணின் பூர்வகுடிகள் தமக்கான வசதிகளையும் உரிமைகளையும் சரிவரப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அவுஸ்ரேலியாவின் கல்வி அமைப்பினால் கல்வியறிவைப் பெறுவதில் பூர்வகுடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பூர்வகுடிமக்களின் சனத்தொகையில் இரண்டு சதவீதமானவர்கள் மட்டுமே பட்டப்படிப்பையோ அல்லது அதற்கு மேலான கல்வித் தகுதியையோ பெற்றிருக்கின்றனர். பல்வேறு ஆய்வுகளின் படி பூர்வகுடியினரின் ஆரோக்கிய நிலையானது மற்றய அவுஸ்ரேலியர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனால் மிக இளம் வயதில் இறப்பதற்கும், உடல்நலக்குறைவால் வாழ்க்கைத் தரம் குறைவடைவதற்கும் அதிக வாய்ப்புகள் உள்ளவர்களாகவே இருக்கின்றனர்.

குற்றவியல் தரவுகளின் படி, அவுஸ்ரேலிய மக்கள் தொகையில் குற்றமிழைக்கும் பூர்வகுடியினர் நாற்பதில் ஒருவராகவும், சிறையில் உள்ளவர்களில் ஐந்தில் ஒருவராகவும் இருக்கின்றனர். பூர்வகுடியினரின் சிறைக்குற்றவாளிகளின் விகிதமானது மற்றையவர்களை விட 15 மடங்கு அதிகமாக உள்ளது. 2023 ஆம் ஆண்டில், பூர்வகுடியினருக்கான சிறைத்தண்டனையானது 100,000 பேருக்கு 2,266 ஆக இருக்கும் போது, மற்றைய அவுஸ்ரேலியர்களுக்கு 100,000 பேருக்கு 149 என்ற விகிதமாக இருந்தது. 2024ம் ஆண்டுக்கான தரவுகளின் படி, சிறைச்சாலையில் இறந்த 104 பேர்களில் 80 பேர்கள் பூர்வகுடியினர் என்பதும் வருத்தத்தைத் தரும் தகவலாகவே இருக்கின்றது. பூர்வகுடியினரின் சமூகப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கை முறை நெறிப்படுத்தப்படாவிட்டால் அடிப்படைப் பிரச்சினைகள் என்றும் தீரப்போவதில்லை.

பூர்வகுடியினரின் வறுமை நிலையையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் வாழ்க்கைத்தரமானது பின் தங்கிய நிலையில் இருப்பதையுமே விசாரணைகளும், ஆய்வுகளும் சுட்டிக்காட்டுகின்றன. அதிகப்படியான வேலை இழப்பு, மோசமான உடல்நலகுறைவுகள், மற்ற அவுஸ்ரேலியர்களைவிட மிகக் குறைந்த வாழ்நாட்கள், பூர்வகுடியினரின் அதிக அளவிலான சிறைத்தண்டனைகள் போன்ற தொடரும் பிரச்சினைகளை நிகழ்காலப் பதிவுகள் கோடிட்டுக் காட்டியிருக்கின்றன.

பன்முகத்தன்மை கொண்ட அவுஸ்ரேலியாவில் பூர்வகுடிகள் துக்கமான நாளாக உணரப்படக்கூடிய ஒரு திகதியை எமது நாட்டின் தேசிய நாளாகக் கொண்டாடுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை.

தேசியச் சிக்கலாக விளங்கும் இந்தப்பிரச்சினையைச் சமாளிக்க அனைத்து நிலைகளிலும் அரசானது ஒருங்கிணைந்த முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கும் நிலையில், முரண்பாட்டைத் தவிர்த்து, இனங்களை ஒன்றிணைத்து சமத்துவத்தை வளர்க்கும் வகையில் வேறொரு தினத்தை அவுஸ்ரேலியாவின் தேசிய விடுமுறை தினமாகக் கொண்டாடுவதே சாலப்பொருத்தமானது. ■

# SST SPICES & Things




**Indian | Sri lankan | South Asian**

Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!




## 7 days

## 10 am to 8 pm

SST Spices & Things
Where quality meets community

**Location:**
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

**Contact:**
03 9417 2517

**Email:**
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 91 தை 2025 தொ.பே:1800 960 162

## க்ளீன் ஸ்ரீலங்கா எதை நோக்கி நகர வேண்டும்?

இலங்கையில் தற்போது திரும்பும் திசையெல்லாம் க்ளீன் ஸ்ரீலங்கா பற்றியே பேச்சு அடிபடுகின்றது. பல தரப்பினரும் இதனை வரவேற்றிருந்தாலும் ஒரு சிலர் அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் விமர்சனக் கணைகளைத் தொடுத்துவருகின்றனர்.

உண்மையாகவே இந்த க்ளீன் ஸ்ரீலங்கா திட்டமென்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும். அதனை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமெனில் முக்கியமாக சில விடயங்களை கட்டாயம் செய்தாக வேண்டும்.

க்ளீன் ஸ்ரீலங்கா என்பதன் நோக்கம் குப்பைகளை அகற்றுவதும், சாக்கடைகளை சுத்தம் செய்வது மட்டும் அல்ல. அது பரந்தப்பட்ட விடயமாகும். அந்த இலக்கை நோக்கி அநுர அரசு நகர வேண்டும். அவ்வாறு நகர்ந்தால் மாத்திரமே க்ளீன் ஸ்ரீலங்கா என்பது வெற்றியளிக்கும்.

இலங்கையில் இதற்கு முன்னர் இதேபோன்றதொரு எழுச்சிக்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ச வெற்றிபெற்றார். அதன்பின்னர் இளைஞர்கள் தாமாகவே முன்வந்து வீதிகளில் இறங்கி நாட்டை சுத்தம் செய்தனர். பாழடைந்து காணப்பட்ட பகுதிகளில் எல்லாம் ஓவியங்கள் வரைந்து நாட்டை அழகுப்படுத்தினர். வடக்கு, கிழக்கில்கூட இப்படியான நடவடிக்கைகள் இடம்பெற்றன.

எனவே, இலங்கையில் சட்டவிரோதமாக இடம்பெற்றுள்ள படுகொலைகள், கடத்தல்கள் மற்றும் காணாமல்ஆக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். கடந்த ஆட்சிகாலங்களில் சிற்சில சம்பவங்கள் திட்டமிட்ட அடிப்படையில் மூடிமறைக்கப்பட்டன. சாட்சிகள் இருந்தும் விசாரணைகள் திசைதிருப்பப்பட்டன.

ஆகவே இவ்வாறான கோப்புகளை வெளியில் எடுத்து, கொலை, கொள்ளை, கடத்தல்கள் தொடர்பான குற்றவாளிகள் கண்டறியப்பட்டு, அது தொடர்பான வழக்குகள் க்ளீன் செய்யப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

படையினரிடம் சரணடைந்த, உறவுகளால் கையளிக்கப் பட்ட நபர்களுக்கு என்ன நடந்தது என்பதும் கண்டறியப்பட்டு மக்கள் மனங்களில் உள்ள சந்தேகங்கள் க்ளீன் செய்யப்பட வேண்டும்.

நெடுநாட்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு, அவர்களின் இருள் சூழ்ந்த வாழ்க்கை க்ளீன் செய்யப்பட வேண்டும்.

அத்துடன், புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு தடையாக உள்ள காரணிகள் க்ளீன் செய்யப்பட வேண்டும். இப்படியான விடயங்கள் இடம்பெற்றால் மாத்திரமே க்ளீன் ஸ்ரீலங்கா இலக்கை நோக்கி நகர்கின்றது என நம்ப முடியும்.

அநுர அரசுக்கு மக்கள் ஆணை கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, தடைகள் வந்தாலும் எதற்கும் அஞ்சாமல் முன்னோக்கி செல்ல வேண்டும். ஏனெனில் ஆட்சிக்கு வந்து முதல் இரு வருடங்களுக்குள் முக்கியமான சில விடயங்களை செய்து முடித்துவிட வேண்டும்.

காலம் கடந்தால் முன்னோக்கி செல்வதற்கு அரசியல் ரீதியில் பல தடைகள் உருவாகக்கூடும். புதிய அரசமைப்பு உள்ளிட்ட பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண் டும்.

பிடுங்க வேண்டிய ஆணிகள் பல இருக்க தேவையற்ற ஆணிகளை பிடுங்க முற்பட்டால் அது நகைச்சுவைத் தனமானதாக மாறிவிடும். எனவே, இலங்கையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றத்தை வரலாற்று வெற்றியாக மாற்றியமைப்பதற்குரிய அஸ்திரமாக இந்த க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை அநுர அரசு பயன்படுத்த வேண்டும்.



# பொருநை : ஆற்றாங்கரை நாகரிகம்



அ.முத்துக்கிருஷ்ணன்

இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் முதலாவதும் முதன்மையானது ஆதிச்சநல்லூர் அகழாய்வே. தாமிரபரணி ஆற்றில் பெரும் வெள்ளம் வருகிறது. அந்த வெள்ளம் ஆற்றாங்கரையில் உள்ள பறம்பைக் கீறி பதம் பார்க்கிறது, வெள்ளம் வடிந்ததுமே அங்கே நிறைய மட்பாண்டங்கள் வெளிப்படுகின்றன. இதனைப் பார்வையிட்ட கால்டுவெல் அவர்கள் உடன் ஜெர்மனிக்கு தகவல் தருகிறார்.

1876 இல் ஜெர்மன் நாட்டை சேர்ந்த முனைவர் ஜாகோர் ஆதிச்சநல்லூர் பறம்பில் உள்ள புதர்களை எல்லாம் சுத்தம் செய்து அங்கு புதையுண்டு கிடந்த நம் பழம்பொருட்களை எடுத்தார். இதன்பின்னர் 1903 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் ரீ இதே பகுதியில் ஒரு அகழாய்வை நடத்தினார். மட்பாண்டங்கள், இரும்பு ஆயுதங்கள், கத்திகள், கைக்கோடரிகள், எலும்புகள், மனித மண்டை ஓடுகள் என்பன இங்கே கிடைத்தன.

1913 இல் அவர் ஆதிச்சநல்லூரில் கிடைத்த பொருட்களின் பட்டியலை Catalogue of the Prehistoric Antiquities from Adichanallur and Perumbair என்று வெளியிட்டார். இப்படியாக ஒரு நூற்றாண்டையும் தாண்டி ஆதிச்சநல்லூர், அகழாய்வு வட்டங்களில் தொடர்ந்து தனக்கான இடத்தை புதிய புதிய கண்டுபிடிப்புகளால் தக்கவைத் துள்ளது. அதனால் தான் தென்னிந்தியா வின் நாகரீகத் தொட்டில் என்று பொருநை ஆற்றாங்கரை நாகரிகம் அழைக்கப்படுகிறது.

இந்திய ஒன்றிய அரசின் அகழாய்வுத் துறை 2003-2005 காலகட்டத்தில் ஆதிச்சநல்லூர் பகுதியில் அகழாய்வில் ஈடுபட்டது. இதனைத் தொடர்ந்து தற்போது தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறை ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய மூன்று இடங்களில் தொடர்ந்து அகழாய்வு செய்து வருகிறது.

ஆதிச்சநல்லூரில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் பறம்பு (Burial Ground) பகுதியில் மட்டும் நடைபெற்றுள்ளதால், முதுமக்கள் தாழிகள் பற்றியும், இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, சடங்குகள், பழக்க வழக்கங்கள் பற்றியும் மட்டுமே அறியமுடிந்தது. இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்விடப் பகுதி, வாழ்வியல் நடைமுறைகள் பற்றி இதுவரை எதுவும் நாம் அறிந்துகொள்ள முடியாமல் இருந்தது. இதற்கு விடைகாணும் நோக்கத்தில் ஆதிச்சநல்லூரின் வாழ்விடப் பகுதியாகக் கருதப்படும் புதிய இடங்களில் இந்தமுறை மாநில தொல்லியல் துறை அகழாய்வுகளை நடத்தியது.

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175




# பொருநை : ஆற்றாங்கரை நாகரிகம்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு நடந்த அகழாய்வில் இரும்புக் காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்க காலம் என இரண்டு காலகட்ட வாழ்விடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கற்காலத்தைச் சார்ந்த நுண்கற்காலக் கற்கருவிகள் கிடைத்திருப்பதன் மூலம் இரும்புக் காலத்திற்கு முற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்திருக்கலாம் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இரும்புக் காலத்தைப் பொறுத்தவரை, முதுமக்கள் தாழிகளும் ஈமப் பொருட்களும் கிடைத்திருப்பதை வைத்து உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

ஆதிச்சநல்லூர் அகழாய்வைப் பொறுத்தவரை, 847 தொல்பொருட்களும் பல்வேறு வகையான பழங்கால மட்பாண்டங்கள் பெரும் எண்ணிக்கையிலும் கிடைத்தன. முதல் முறையாக, தமிழி எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடுகள் தற்போதைய அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. மேலும், குறியீடுகள் (graffiti) கொண்ட பானை ஓடுகள் 500க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் குறிப்பாக சிவகளை பறம்பில் வெளிப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றில் உமி நீங்கிய நெல்மணிகள் கிடைத்தன. அதனை அமெரிக்காவின் மியாமியில் உள்ள பிடா அனாலிட்டிகல் லேபோராட்டரில் ஆய்வு செய்தது. அவை இன்றில் இருந்து 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கிற புதிய செய்தியை கொடுத்துள்ளது. 1000-க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளன ஒவ்வொன்றும் நமக்கு ஒரு புதிய திறப்பைத் தருகின்றன.



ஆதிச்சநல்லூர், இரண்டாம் தமிழ்ச் சங்ககாலத்தில் கொற்கையினை தலைநகராகக் கொண்டு பாண்டியர்கள் ஆட்சி புரிந்தபோது ஒரு முக்கியமான பண்பாட்டு சிறப்பு மிக்க நகரமாக இருந்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் முதலில் வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்பதை உலகின் பல ஆய்வுகள் ஏற்கனவே தீர்க்கமாக சொல்லிவிட்ட நிலையில். தாமிரபரணி ஆற்றாங்கரை நாகரிகம் அதனை மீண்டும் நமக்கு உறுதி செய்து கொடுத்துள்ளது.

சென்னை அருங்காட்சியகத்திற்கு முதல் முறை சென்றபோது, அத்தனை பெரிய அருங்காட்சியகத்தில் முதலில் நான் பார்த்தது ஒரு கற்கோடரியைத் தான். 1863 ஆம் ஆண்டு நிலவியலாளர் இராபர்ட் புருசு ஃபூட் என்பவரால் சென்னை அருகே உள்ள அத்திரம்பாக்கத்தில் இந்தக் கற்கோடரி கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கற்கோடரி 3,85,000 ஆண்டுகள் பழமையானது என்கிற செய்திதான் என்னை அங்கு அழைத்துச் சென்றது. இப்படியாக மனித நாகரீகத்தின் கால்தடங்களை அறிவியல் பூர்வமாக தேடுவது கண்டைவதும் நாம் யார் என்பதை அறிந்து கொள்ள, நம்முடைய கடந்த கால பாதைகள், பன்பாடுகள் எத்தகையது என்பதை இன்னும் நுட்பமாக புரிந்து கொள்ள உதவுகின்றன.

இப்படியான ஒரு தேடுதலின் தொடர்ச்சியாகவே உலகம் முழுவதும் உள்ள அருங்காட்சியகங்களை பார்வையிடுவதும் மனித குலம் குறித்து அதிசயிக்கத்தக்க விடயங்களை அறிந்து கொள்வதையும் எனது வாடிக்கையாக வைத்துள்ளேன். என்னுடைய ஆஸ்திரேலிய பயணங்களில் நான் அடிலைட் நகரத்தில் உள்ள South Australian Museum த்திலும் Northen Territoryயின் Darwin யில் அமைந்துள்ள Museum and Art Gallery of the Northern Territory ஆகிய இரண்டு அருங்காட்சியங்களில் தான் ஆஸ்திரேலிய ஆதிப்பழங்குடிகள் (Aboriginal) குறித்தும் அவர்களின் பண்பாடுகள் குறித்து முக்கியமான புரிதல்களை அடையமுடிந்தது.




365 MEDIA Production
AUSTRALIA TOUR
CENTEX HOMES
Proudly presents
Saturday
15
MARCH
2025
ஈழ மண்ணின் சொல்லிசை மன்னர்களின்
இசைக் கர்ஜனை
RAP CYLON
MEGA
MUSICAL
NIGHT
Tamil Rap 2025
MELBOURNE
SPRINGVALE TOWN HALL
18 Grace Park Ave, Springvale VIC 3171
GOLD SPONSORS
CATERING PARTNER
Restaurant & Bakery
SOUTH INDIAN KITCHEN
MKS
MKS Spices'n Things
HENLEYS
QR Code
FOR
TICKET BOOKING
MEDIA PARTNERS
YOUTH PARTNER
COMUNITY PARTNER
TRAVEL PARTNER
Tamil Australian
AUS தமிழ் TV
எதிரொலி
SWINBURNE
CLUB
SriLankan
Airlines

# கடந்து போன 2024


## ஆஸ்திரேலியா உட்பட உலகெங்கும் கடந்தவருடம் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகளின் தொகுப்பு








**ஜனவரி - 03 -** ஈரானில் இரட்டைக் குண்டு வெடிப்பு: 103 பேர் பலி, 141 பேர் காயம்
**ஜனவரி - 23-** அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாக ஸ்கொட் மொரிசன் அறிவிப்பு
**ஜனவரி - 26 -** காசாவில் இனப்படுகொலையைத் தவிர்க்குமாறு இஸ்ரேலுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவு
**பெப்ரவரி - 08 -** பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மாரேபே ஆஸி. நாடாளுமன்றில் உரை
**பெப்ரவரி - 16 -**சிறை வைக்கப்பட்டிருந்த ரஷ்யாவின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான அலெக்ஸி நவால்னி உயிரிழப்பு
**பெப்ரவரி - 28 -**ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான சாந்தன் காலமானார்



**மார்ச் - 06 -**உலகப் பணக்காரர் பட்டியலில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ் மீண்டும் முதலிடம்
**மார்ச் - 07 -** சுவீடன் நேட்டோவில் இணைய அங்கத்துவ நாடுகள் அனுமதி: இதற்கமைய 32 ஆவது அங்கத்துவ நாடாக நேட்டோவில் சுவீடன் இணைவு
**மார்ச் - 22-** ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் அரங்கொன்றில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 143 பேர் பலி
**மே - 02 -**இஸ்ரேலுடனான உறவுகளை முறித்துக்கொள்வதாக கொலம்பிய ஜனாதிபதி அறிவிப்பு
**மே - 11 -**ஐ.நா. அமைப்பில் பாலஸ்தீனம் உறுப்பு நாடாக இணைவதற்குரிய தீர்மானம் நிறைவேற்றம்: ஆஸி. ஆதரவாக வாக்களிப்பு
**மே - 16 -**திருமண பந்தத்தில் இணைந்தார் ஆஸி. வெளிவிவகார அமைச்சர்
**மே - 16 -**ரஷ்ய ஜனாதிபதி சீனாவுக்கு பயணம்
**மே - 20 -**விமான விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்கள் உயிரிழப்பு
**ஜுன் - 05 -** 18 ஆவது இந்திய மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி
**ஜுன் - 12 -**குவைத்தில் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 41 பேர் உயிரிழப்பு
**ஜுன் 12 -** காங்கோவின் புதிய பிரதமராக ஜூடித் சுமின்வாதுலுக்கா தெரிவு: காங்கோ நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை இதன்மூலம் அவர் பெற்றார்.
**ஜுன் - 25-** விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச பிரிட்டன் சிறையிலிருந்து விடுதலை



**ஜுன் - 30 -**இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் இரா. சம்பந்தன் காலமானார்
**ஜுலை - 05 -** பிரித்தானியாவில் கன்சர்வேட்டிவ் கட்சியின் 14 ஆண்டு கால ஆட்சிக்கு முடிவு கட்டியது தொழிற்கட்சி
**ஜுலை - 06 -** ஈரானின் புதிய ஜனாதிபதியாக மசூத் பெசெஸ்கியன் தெரிவு
**ஜுலை - 14 -**அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிப் பிரயோகம்
**ஜுலை - 16 -**அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப் பெயரிடப்பட்டார்



**ஜுலை -22 -**அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலிருந்து விலகினார் ஜோ பைடன்
**ஜுலை - 31 -** ஈரானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே பலி
**ஓகஸ்ட் 05 -** பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகல்
**ஓகஸ்ட் 07-** பங்களாதேஷில் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனு நியமனம்



**ஓகஸ்ட் 10 -** பிரேஸிலில் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 61 பேர் உயிரிழப்பு
**செப்ரெம்பர் - 22** இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார வரலாற்று வெற்றி
**செப்ரெம்பர் 23 -** இஸ்ரேல் கொலைவெறித் தாக்குதல்: லெபனானில் குழந்தைகள் உட்பட 500 பேர் பலி
**செப்ரெம்பர் - 24 -**இலங்கை நாடாளுமன்றம் கலைப்பு
**செப்ரெம்பர் - 27--** இஸ்ரேல் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஷேக் ஹசன் நஸ்ரல்லா உயிரிழப்பு
**ஒக்ரோபர் - 01 -**இஸ்ரேல்மீது ஈரான் ஏவுணைத் தாக்குதல்
**ஒக்ரோபர் - 05 -**பதவிக்காலத்தில் அன்பளிப்புகளை பெற்றுக்கொண்ட சிங்கப்பூர் முன்னாள் அமைச்சருக்கு சிறைத்தண்டனை
**ஒக்ரோபர் - 15 -**ஈரான் ஏவுகணைத் திட்டத்துடன் தொடர்புடையவர்களுக்கு பயணத் தடை விதித்தது ஆஸ்திரேலியா
ஒக்ரோபர் - 18- பிரிட்டிஷ் மன்னர் மற்றும் ராணி ஆஸ்திரேலியா வருகை
**ஒக்ரோபர் - 21-** மலேரியா அற்ற நாடாக எகிப்து பிரகடனம்
**ஒக்ரோபர் - 22 -**மெல்பேர்ணில் மாபெரும் பேரணியுடன் நிறைவுக்கு வந்தது அகதிகளின் 100 நாள் போராட்டம்
**ஒக்ரோபர் - 22 -**பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிப்பு
**ஒக்ரோபர் - 23 -**10 ஈரானிய பிரஜைகளுக்கு இலங்கையில் ஆயுள் தண்டனை
**ஒக்ரோபர் - 24 -**பொதுநலவாய அரச தலைவர்களின் உச்சி மாநாடு சமோவாவில் கோலாகலமாக ஆரம்பம்
**ஒக்ரோபர் - 26 -**ஈரான்மீது இஸ்ரேல் தாக்குதல்
**ஒக்ரோபர் - 27 -**குயின்ஸ்லாந்து தேர்தலில் லிபரல் தேசியக் கட்சி வெற்றி
**நவம்பர் - 06 -**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம் வெற்றிநடை
**நவம்பர் - 15 -**இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி
**நவம்பர் - 21** இஸ்ரேல் பிரதமரை கைது செய்யுமாறு சர்வதேச நீதிமன்றம் உத்தரவு
**நவம்பர் - 23** இஸ்ரேலின் முன்னாள் நீதி அமைச்சர் அய்லெட் ஷேக்கின் விசா விண்ணப்பத்தை நிராகரித்தது ஆஸி.
**நவம்பர் - 28 -** 16 வயதுக்குட்பட்ட சிறார்கள் சமூகவலைத்தளங்கள் பயன்படுத்த தடை: ஆஸியில் சட்டம் நிறைவேற்றம்
**நவம்பர் - 28 -**ஈழத் தமிழர்களுக்கு பெருமை சேர்ந்த மலேசிய மில்லியனரான ஆனந்த கிருஷ்ணன் காலமானார்
**நவம்பர் - 29 -**பூர்வகுடி ஆணையகத்தின் முன்னாள் தலைவருக்கு ஆறாண்டுகள் சிறை தண்டனை
**டிசம்பர் - 06 -**மெல்பேர்ணில் யூத வழிபாட்டுதலம்மீது தாக்குதல்: இஸ்ரேல் பிரதமர் கடும் கண்டனம்
**டிசம்பர் - 15 -** பாலி நைன் போதைப் பொருள் கடத்தல் குழுவினர் இந்தோனேசிய சிறையிலிருந்து ஆஸி. திரும்பினர்
**டிசம்பர் - 18 -**இலங்கையில் முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய இராணுவப் பாதுகாப்பு நீக்கம்



**டிசம்பர் - 19 -**குழந்தைகள் முன்னிலையில் மனைவியை வெட்டிக்கொலை செய்த இலங்கையருக்கு ஆஸியில் 37 ஆண்டுகள் சிறைத்தண்டனை
**டிசம்பர் - 26 -**கஜகஸ்தான் விமான விபத்தில் 35 பேர் உயிரிழப்பு
**டிசம்பர் - 26 -** இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் காலமானார்
**டிசம்பர் - 27 -**விக்டோரிய மாநில லிபரல் கட்சி தலைவர் பதவி நீக்கம்: புதிய தலைவராக பிராட் பேட்டின் தெரிவு
**டிசம்பர் - 29 -**அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் காலமானார்
**டிசம்பர் - 29 -**தென்கொரிய விமானம்மீது ரஷ்ய நடத்திய தாக்குதலில் 179 பேர் பலி. இருவர் மாத்திரமே உயிர் தப்பினர்.



# வரலாறு என்பது பரிணாமம் > பரிமாணம்



கருணாகரன்

பிராந்திய அரசியலில் தமிழ்த்தேசியக் கட்சிகள் பின்னடைவைச் சந்தித்துள்ளபோதும், இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டும் வெற்றியடைந்துள்ளது அல்லது தப்பிப் பிழைத்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் அதற்கு எட்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன. தமிழ்க்காங்கிரசுக்கு ஓரிடமும் ரெலோவுக்கு ஓரிடம் கிடைத்திருக்கிறது. ரெலோ அரும்பொட்டில் அந்த இடத்தைப் பெற்றது.

வரலாற்றில் சில ஆச்சரியமான சங்கதிகள் இருப்பதுண்டு. அப்படியான ஒன்றே, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கான இந்த இடம். 50 ஆண்டுகளுக்கு முன்பே (1972 இல்) காலாவதியாகிப்போன தமிழரசுக் கட்சி, எதிர்பாராத வரலாற்றுச் சுழிப்புகளுக்கூடாக மீளுயிர்ப்படைந்து வெற்றிப் பீடத்தில் ஏறியிருக்கிறது என்றால், ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா? ஆனால், இந்த வெற்றியை அது கொண்டாட முடியாமல் உள்ளது. அதற்குள் நடந்து கொண்டிருக்கின்ற அதிகாரப் போட்டிகளும் அதன் வெளிப்பாடாகியிருக்கும் உட்கட்சி மோதல்களும் கட்சியைப் பாடாய்படுத்திக் கொண்டிருக்கின்றன. உட்கட்சி மோதல்கள் வலுவடைந்து, எல்லையை மீறி, நீதிமன்றம் வரையில் சென்றுள்ளன. இப்பொழுது ஏட்டிக்குப் போட்டியாகப் பல வழக்குகள். மேலும் மேலும் புதிய புதிய வழக்குகள். இந்த வழக்குகள் இப்போதைக்கு முடியுமென்று தெரியவில்லை. அப்படி முடிந்தாலும் புதிய வழக்குள் முளைக்கக் கூடிய சாத்தியமே அதிகமாக உண்டு.

இந்த நிலையில் கட்சி எப்படி தன்னுடைய பவள விழாவை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியும்? அப்படிக் கொண்டாட முற்பட்டால் அதையிட்டும் சில பல வழக்குகள் தொடரப்படலாம். பவளவிழாக் கொண்டாட்டங்களில் யாரை முதன்மைப்படுத்துவது, யாரைக் கைவிடுவது, யாரைப் பின்தள்ளுவது, யாரைப் பலியிடுவது என்ற பிரச்சினை (உட்கட்சி அரசியல்) கட்சிக்குள் உருவாகி மேலும் பிளவுகளும் வழக்குகளும் பெருகும் என்பதால் 75 ஆவது ஆண்டு நிறைவை யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வநாயகம் நினைவுத் தூபிக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, எளிமையான முறையில் கொண்டாடப்பட்டுள்ளது. இதிற் கூட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவில்லை. சிலவேளை எதிர்வரும் மாதங்களில் ஏதாவது அதிசயம் ஏற்பட்டு, பவளவிழாவைக் கொண்டாடக் கூடும்.

## பின்னணிக்கதை

1949 ஆம் ஆண்டில் எஸ். ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி (Illankai Tamil Arasu Kachchi, ITAK, முன்னாள் சமஷ்டிக் கட்சி, Federal Party) செல்வநாயகத்தின் காலத்திலேயே 1972 இல்) காலாவதியாகி விட்டது. இதைச் செல்வநாயகமே வெளிப்படையாகச் சொல்லியிருந்தார் - ஒப்புக் கொண்டிருந்தார். அதை முன்னிட்டு அவர்கூறினார், 'தமிழர்களை இனிக்கடவுள்தான் காப்பாற்ற வேணும்' என்று.

செல்வநாயகத்தின் அரசியற் பயணம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் தொடங்கியது. காங்கிரஸுடன் முரண்பட்டுக் கொண்டே அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்திருந்தார். ஆகவே அவரைப் பொறுத்தவரை ஈழத் தமிழர்களுக்காக அன்றிருந்த இரண்டு கட்சிகளும் இயலமைக்குள்ளாகியிருந்தன என்ற சூழலில்தான் செல்வநாயகம் அப்படிச் சொன்னார்.

அதற்குப் பிறகு, கட்சியின் அடுத்த நிலையிலிருந்த, அடுத்த தலைமுறையைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், புதியதொரு உத்தியைப் பயன்படுத்தினார். தமிழரசுக் கட்சியையும் தமிழ்க் காங்கிரஸையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார் அமிர்தலிங்கம். அதாவது, அதே போத்தலுக்கு புதிய லேபிளை ஒட்டிக் காட்சிப்படுத்தினார் அமிர்தலிங்கம். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி பெரு வெற்றியைப் பெற்றது. ஆனாலும் அந்த வெற்றி, அடுத்து வந்த நான்கு ஆண்டுகளோடு முடிவுக்கு வந்தது.

1981 இல் ஆட்சியிலிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையை அறிமுகப்படுத்தினார். அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி அதை ஆதரித்தது. அடுத்த தேர்தல் தமிழீழத்தில்தான் என 1977 ஆண்டு தேர்தல் மேடைகளில் பிரகடனப்படுத்தப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக மாவட்ட அபிவிருத்தி சபைக்கு அமிர்தலிங்கம் சம்மதம் தெரிவித்தமை, அன்றைய இளைஞர் இயக்கங்களுக்குக் கடுமையான கோபத்தை உண்டாக்கியது. விளைவாக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிசையாகச் சுட்டுக் கொல்லப்படத் தொடங்கினர். பொத்துவில் கனகரத்தினம், யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஆலாலசுந்தரம், உடுவில் தருமலிங்கம் (புளொட் சித்தார்த்தனின் தந்தை) என தலைகள் உருளத் தொடங்க, மிஞ்சியோர் நாட்டை விட்டே தப்பியோடி இந்தியாவில் தஞ்சமடைந்தனர். சிலர் புலம் பெயர்ந்து சென்று விட்டனர். மட்டக்களப்பு இராசதுரை அரசாங்கத்துடன் இணைந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் அரங்கிலிருந்து தூக்கியெறியப்பட்டது அல்லது துரத்தப்பட்டது அல்லது தூரப்போனது. எப்படியாவது வைத்துக் கொள்ளலாம்.

அதற்குப் பிறகு 1980 - 2009 வரை விடுதலை இயக்கங்களின் கைகளிலும் விடுதலைப் புலிகளிடமும்தான் வடக்கு-கிழக்கு (பிராந்திய) அரசியல் இருந்தது. தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவற்றின் அடையாளமோ செல்வாக்கோ வடக்கு- கிழக்கில் (தமிழ் பேசும் பிராந்தியத்தில்) இல்லாமல் போய் விட்டது. அதுமட்டுமல்ல, அதனுடைய தலைவர்களான அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் 1989 இல் கொழும்பில் வைத்துக் கொல்லப்பட்டனர். சிவசிதம்பரம் காயங்களோடு தப்பினார். இன்னொரு தலைவரான தங்கத்துரை திருகோணமலையில் வைத்துக் கொல்லப்பட்டார். நீலன் திருச்செல்வம் கொழும்பில் கொல்லப்பட்டார். இப்படியே தமிழர் விடுதலைக் கூட்டணியின் (தமிழரசுக் கட்சியின்) தலைவர்கள் கொலைப்பட்டியலில் இருந்தனர். தப்பி, மிஞ்சிய தலைவர்கள் கொழும்பு அரசின் தயவில் - பாதுகாப்பில் வாழ்ந்தனர். 1994 இல் இரா. சம்பந்தனுடைய பாதுகாப்புக்காக குண்டு துளைக்காத காரை கொழும்பு வழங்கியிருந்தது.

## இடைக்காலச் சூழல்

2001 இல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தையின்போது, ஜனநாயக ரீதியில் புலிகளுக்கு மக்களிடம் உள்ள செல்வாக்கை - ஆதரவை - நிரூபித்துக் காட்ட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இதற்காக அவர்கள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி என்ற தங்களுடைய கட்சியின் சின்னத்தைப் பற்றியே முதலில் யோசித்தனர். அதைப் பயன்படுத்த முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. காரணம், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைத் தொடர்ந்து கட்சியாக இயக்கவில்லை என்பதோடு, அதனுடைய தலைவரான கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) உயிரோடில்லை என்பதும் பிரச்சினையாக இருந்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# வரலாறு என்பது பரிணாமம் > பரிமாணம்





(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட தரப்புகளோடு புலிகள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். கூடவே வெளியே நின்ற ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, தமிழ்க்காங்கிரஸ் போன்றவற்றையும் ஒரே குடையின் கீழ்க் கொண்டு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. கூட்டணியின் உதயசூரியன் சின்னம் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் ஆனந்தசங்கரிக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதால், உதயசூரியன் சின்னத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று ஆனந்தசங்கரி மறுத்தார்.

அதனால் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தைக் கூட்டமைப்புப் பயன்படுத்தும் நிலை உருவானது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பதிலாகத் தமிழரசுக் கட்சி என்ற அடையாளத்தோடு சம்பந்தன் மேலேழுந்தார். 1994 இல் கொழும்பின் ஆளாகக் கருதப்பட்ட சம்பந்தன், 2001 க்குப் பிறகு புலிகளின் ஆள் என்று சொல்லப்பட்டார். 1994இல் கொழும்பு குண்டுதுளைக்காத பாதகாப்பு வாகனத்தைச் சம்பந்தனுக்கு வழங்கியது. 2004 இல் புலிகளின் அங்கீகாரத்தோடும் மரியாதையோடும் சம்பந்தன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரானார். வரலாற்றில் ஆச்சரியமான சங்கதிகள் இருப்பதுண்டு என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

தனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பைச் சம்பந்தன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதோடு, தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ போன்றவற்றைப் பலப்படுத்துவதை விட தமிழரசுக் கட்சி பரவாயில்லை. ஆயுதமேந்தாத தரப்பு என்ற வகையில் அதை எப்போதும் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்ளலாம் என்று புலிகள் கருதினர். தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்புகளிருந்தாலும் அப்போது அதைப் பயன்படுத்தக் கூடிய நிலையில் அதனுடைய தலைவராக இருந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தி முயற்சிக்கவில்லை. மட்டுமல்ல, சம்பந்தனுடைய சாமர்த்தியத்தை மிஞ்சக் கூடிய அளவுக்கு விநாயகமூர்த்தியிடம் ஆளுமையில்லை. அவர் மிகச் சாதுவான மனிதராக - சுளிப்புகள் எதுவும் தெரியாத அரசியல் தலைவராக -அப்பாவி விநாயகமூர்த்தியாக- இருந்தார்.

2009 இல் விடுதலைப் புலிகள் வீழ்ச்சியடைந்ததோடு சம்பந்தனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் அடித்தது யோகம். கேள்விக்கிடமில்லாத வகையில் தன்னையும் தமிழரசுக் கட்சியையும் ஸ்தாபித்தார் சம்பந்தன். இதற்காக அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்த ஏனைய தரப்புகளிலிருந்து ஆட்களை உருவியெடுத்தார். கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும். சுழற்சியில் தலைமை மாற்றப்பட வேண்டும். கூட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைகளை எல்லாம் உதாசீனப்படுத்திய அல்லது பொருட்படுத்தாத ஒரு போக்கைச் சம்பந்தன் பின்பற்றினார். 'விரும்பினால் சேர்ந்திருங்கள். அல்லது வெளியேறிச் செல்லலாம்' என்ற மாதிரி நடந்து கொண்டார். இதனால் உண்டான விமர்சனங்களைப் பற்றியெல்லாம் சம்பந்தன் கவலைப்படவேயில்லை. பதிலாகத் தனக்கும் தமிழரசுக் கட்சிக்கும் பலம் சேர்க்கும் வகையில் கொழும்பிலிருந்து விக்னேஸ்வரன், சுமந்திரன், தவராஜா போன்றவர்களைச் சேர்த்தார்.

சம்பந்தனுடைய இந்தப் போக்கையும் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தையும் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் காங்கிரஸூம் ஈ.பி.ஆர்.எல்.எப் உம் வெளியேறின. சம்பந்தன் கவலைப்படுவேயில்லை. காரணம், அதற்குப் பிறகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்குள் முதன்மை பெற்றிருந்த தமிழரசுக் கட்சியும் பிராந்திய அரசியலில் முதன்மையைக் கொண்டிருந்தமையே. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவரானார். விக்கினேஸ்வரன் ஒரு கட்டத்தில் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிச் சென்றாலும் சம்பந்தனும் சுமந்திரனும் தமிழரசுக் கட்சியின் முகமாகவும் தமிழ்த்தேசியக் கட்சியின் அடையாளமாகவும் இருந்தனர். இது கூட்டமைப்பில் எஞ்சியிருந்த ரெலோவுக்கும் புளொட்டுக்கும் தீராத தலையிடியாகவும் மாறாத அவமானமாகவும் இருந்தது. ஆனாலும் சம்பந்தனை முறித்துக் கொண்டு வெளியேற முடியாத நிலையில் தமிழரசுக் கட்சியோடும் சம்பந்தன் - சுமந்திரன் அணியோடும் இழுபட்டுக் கொண்டிருந்தன இரண்டும். 2022 இல் உள்ளூட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதோடு, ரெலோவையும் புளொட்டையும் தனித்துப் போட்டியிடுமாறு தமிழரசுக் கட்சி கூறியது. அதனோடு கூட்டமைப்பு முடிவுக்கு வந்தது. சம்பந்தனின் மறைவும் ,கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பதவிக்காலத்தின் முடிவும் கூட்டமைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

## பிந்திய கதை அல்லது தற்போதைய நிலை

சம்பந்தனுடைய மறைவோடு ரெலோ, புளொட், ஈ.பி. ஆர்.எல். எப், ஜனநாயகப் போராளிகள் எல்லாம் இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற புதிய கட்டமைப்பை வலுப்படுத்த முயற்சித்தன. இதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலை ஒரு மாற்றாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்பட்டனர். அதனுடைய விளைவே, தமிழ்ப்பொது வேட்பாளராகும். ஆனால், தமிழரசுக் கட்சி இதற்கு மாறாகச் செயற்பட்டது. அது சஜித் பிரேமதாசவை ஆதரித்தது. கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி எட்டு ஆசனங்களைக் கைப்பற்ற, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒரு ஆசனத்தோடு பின்தள்ளப்பட்டது. காங்கிரஸூக்கும் ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்தது. இப்பொழுது தமிழரசுக் கட்சி வெற்றியடைந்த தமிழ்க்கட்சியாக - பிராந்திய அரசியல் சக்தியாக ஒரு தோற்றத்தில் உள்ளது. ஆனால், வடக்கு- கிழக்குப் பிராந்தியத்தில் ஆளும் தேசிய மக்கள் சக்தி 12 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. போனஸ் ஆசனத்தையும் சேர்த்தால் தேசிய மக்கள் சக்தியின் இந்த எண்ணிக்கை கூடுதலாகவே இருக்கும்.

என்றாலும் தமிழ் அடையாளக் கட்சி என்ற வகையிலும் வடக்கு- கிழக்கிலுள்ள தமிழ்த்தேசியப் பிராந்திய அரசியற் கட்சி என்ற அடிப்படையிலும் தமிழரசுக் கட்சியின் வெற்றி புறக்கணிக்க முடியாதது. தனித்து நின்று அது இந்த வெற்றியைப் பெற்றுள்ளது. கட்சிக்குள் உள்மோதல்கள் பகிரங்கமான நிலையிலும் அதனால் வெற்றியடைய முடிந்திருக்கிறது என்றால், இதற்குப் பின்னுள்ள ரகசியம் என்ன? தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியைத் தேர்வு செய்ததற்கான காரணம் எது?

## போருக்குப் பிந்திய சூழல் - போருக்குப் பிந்திய அரசியல்

இது போருக்குப் பிந்திய சூழலாக (Post – War period) இருந்தாலும் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் போருக்கு முந்திய அரசியலையே (Pre-war politics) பின்பற்றுவதைக் காணலாம். ஆனால், இன்றைய தேவை போருக்குப் பிந்திய அரசியல் (Post-war politics) அல்லது தீர்வுக்கான அரசியல் (Politics of solution). அதாவது பிரச்சினையைப் பற்றிப் பேசும் தீர்வைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் அரசியல் அல்ல. பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் அரசியலும் தீர்வைப் பற்றிய விவாதங்களைத் தொடர்கின்ற அரசியலும் முரண்பாட்டு அரசியலாகும் (Conflict politics). அதாவது நடைமுறையில் இருப்பது இந்த முரண்பாட்டு அரசியலே (Conflict politics) ஆகும்.

இது மக்களுடைய எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தராது என்பதால்தான் தமிழ் மக்கள் அரசியல், சமூக, பொருளாதாரப் படிநிலையில் பின்னோக்கியும் கீழிறங்கியும் செல்ல நேர்கிறது. இதனால்தான் பெருமளவானோர் மண்ணை விட்டுப் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். இருக்கின்ற மக்களும் தமிழ்த்தேசிய அரசியலை விட்டு, பிராந்திய அரசியலில் இருந்து ஒதுங்கி தேசிய அரசியலின் பக்கமாக நகரத் தொடங்கியுள்ளனர். இது தனியே கடந்த தேர்தலில் மட்டும் நடந்த மாற்றமல்ல. இதற்கு முன்பும் தமிழ்த்தேசிய சக்திகளுக்கு பெரிய வெற்றி கிடைத்தது என்று கூற முடியாது. 2009 இல் இருந்த தமிழ்த்தேசிய ஆதரவுத் தளம் இறங்கியே வந்திருக்கிறது. இதை இன்னொரு வகையில் சொல்வதானால் பிராந்திய அரசியல் (Regional politics ) தேக்கத்துக்குள்ளாகி விட்டது. அப்படியானால் பிராந்திய அரசியல் முடிவுக்கு வந்து விட்டதா? இலங்கை அரசு தொடர்ந்தும் மோசமான முறையில் இனவாத ஒடுக்குமுறையை மேற்கொண்டாலே ஒழிய தமிழ்த்தேசிய அரசியலை - பிராந்திய அரசியலை இதே நிலையில் பின்பற்ற முடியாது.

## தற்போதைய நிலையும் எதிர்காலமும்

தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசியக் கட்சி, தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டணி, தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் எல்லாம் வெவ்வேறு அணியாக இருந்தாலும் இவற்றின் அரசியல் கோட்பாடும் சிந்தனையும் நடைமுறையும் ஒரே மாதிரியானவையே. முரண்பாட்டு அரசியலிலேயே இவற்றின் தளம் உள்ளது. மக்களுக்குத் தேவையானது, தீர்வுக்கான அரசியல் (Politics of solution) ஆகும்.

அதைச் செய்யாத வரையில், அதைப்பற்றிச் சிந்திக்காத வரையில் எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் அது தமிழ் மக்களின் வெற்றியாக அமையாது. ஏற்கனவே அமிர்தலிங்கமும் சம்பந்தனும் எதிர்க்கட்சித் தலைவர்களாகக் கூட இருந்துள்ளனர். அப்படியிருந்தும் தீர்வை எட்டவோ தமிழ் மக்களுக்குப் பயன் கிட்டவோ இல்லை. இந்த நிலையில் தமிழரசுக் கட்சி பெற்ற வெற்றி என்பது, வழமை போல அந்தத் தரப்பின் வெற்றியாக - கட்சியின் வெற்றியாக அமையுமே தவிர, அதொரு மக்கள் வெற்றியாக அமையாது.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சிக்கு இப்பொழுது 75 ஆவது வயதாகிவிட்டது. தமிழர்களின் கொண்டாட்டப் பருவத்தின் படி பார்த்தால் இது பவள விழா ஆண்டு. அதனுடைய நிலையின்படி இது அதற்கொரு வெற்றியே. ஆனால், ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட அரசியற் கட்சி என்ற வகையிலும் தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலையை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்ற அடிப்படையிலும் அது தான் கொண்ட இலக்கு எதையும் அடையவே இல்லை. ஆகவே அது தன்னுடைய 75 ஆண்டு பவள விழாவைக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை. மட்டுமல்ல, இந்த 75 ஆண்டுகளிலும் தமிழரசுக் கட்சி முன்மொழிந்த அரசியலுக்காக பல்லாயிரக்கணக்கானோர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். பல ஆயிரக்கணக்கானோர் தங்கள் உடல் உறுப்புகளை இழந்து நிற்கின்றனர். பல லட்சம்பேர் மண்ணை விட்டுப் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். இந்த நிலையில் தமிழரசுக் கட்சியினால் பவள விழாவைக் கொண்டாட முடியுமா? மட்டுமல்ல, கட்சிக்கு யார் தலைவர்? யாருடைய வழிநடத்தலில், யாருடைய கட்டுப்பாட்டில் கட்சி இருக்கிறது என்றே தெரியாத நிலையே நீடிக்கிறது.

உண்மையில் சம்பந்தனுடைய இறுதிக் காலத்திலும் சரி, அவருக்குப் பிந்திய தற்போதைய சூழலிலும் சரி, தமிழரசுக் கட்சியின் முழுமையான கட்டுப்பாடும் செல்வாக்கும் சுமந்திரன் அணியிடமே உள்ளது. மாவை சேனாதிராஜா தலைவராக இருந்தபோதும் அவரால் கட்சியைக்கட்டுப்பாட்டுடன் வழிநடத்த முடியவில்லை. சிறிதரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோதும் அந்தப் பொறுப்பை எடுக்கும் துணிவோ, சூழலோ அமையவில்லை என்பதால் மத்திய செயற்குழுவே கட்சியை வழிநடத்துகிறது. மத்திய செயற்குழு சுமந்திரனின் செல்வாக்குக்குட்பட்டது. சிலர் கருதலாம், கட்சிக்குள்ளும் தேர்தலிலும் சுமந்திரன் தோற்கடிக்கப்பட்டதால், தமிழரசுக் கட்சியிலிருந்து சுமந்திரன் தூரப் போய் விட்டார் என்று. அப்படியல்ல, தற்போதைய பதில் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், சாணக்கியன், சுமந்திரன் ஆகிய மூவருமே தமிழரசுக் கட்சியின் முகங்களாக சர்வதேச சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் தெரிகின்றனர்.

இந்த நிலையில்தான் கடந்த சில வாரங்களுக்கு முன்பு, கனடாவுக்குச் சென்ற சிறிதரனிடம், அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழரசுக் கட்சியின் கிளைகளை புலம்பெயர்ந்த நாடுகளில் ஆரம்பிப்பதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். கனடாவில் மட்டுமல்ல, புலம்பெயர் மக்கள் வாழ்கின்ற பிற நாடுகளிலும் இவ்வாறு கிளைகள் ஆரம்பிக்கப்படலாம். ஆனால், அது தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை வளர்ப்பதாக (Conflict politics) இருக்குமே தவிர, பிரச்சினைகளைத் தீர்க்கும் அரசியலாக (Politics of solution) இருக்காது. அப்படியென்றால், பயன்தராத மரத்துக்கு ஏன் தண்ணீரும் உரமும்? என்ற கேள்வி எழுகிறது. அந்தக் கேள்வியை எல்லோரும் தமிழரசுக் கட்சியை நோக்கிக் கேட்க வேண்டும். தாய்க் கட்சியாக இருக்கும் தமிழரசுக் கட்சியை புத்துருவாக்கம் செய்தால்தான் - புத்தாக்கங்கள் உருவாகும். அது தற்போது முன்னெடுக்கும் 1970 க்கு முந்திய அரசியலினால் ஒரு போதுமே முன்னேற்றம் நிகழாது. எனவே இன்றைய தமிழரசுக் கட்சி தன்னை முழுதாகப் புனரமைப்புச் செய்ய வேண்டும். அதற்கொரு சிறப்பான முன்னுதாரணம், JVP என்ற கட்சி NPP யான கதை. பரிணாமம், பரிமாணம். நீண்ட வரலாற்றுப் பெருமிதங்களை விடவும், வரலாற்றிலிருந்து எதைக் கற்றுக் கொள்கிறோம் என்பதே முக்கியமானது.

# Where There's WILLS There's a way...

**நாமனைவரும் அறிந்த கிரீன்ஸ் கட்சியைச் சேர்ந்த சமூக ஆர்வலரான திருமதி சமந்தா ரத்னம் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளான சுற்றுச்சூழல் மாசுபாடு, விலைவாசி உயர்வு, வீட்டு வசதிப் பற்றாக்குறை போன்ற விடயங்களுக்காக தொடர்ந்து போராடி வருபவர். அவர் வில்ஸ் தொகுதிக்கான கிரீன்ஸ் கட்சியின் வேட்பாளராக போட்டியிடவுள்ளார். எதிரொலிக்காக அவருடன் அலைபேசியில் நிகழ்த்திய நேர்காணல் இது.**

**நேர்கண்டவர்:**



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**எதிரொலி: 2030க்குள் 100 சதவீத புதுப்பிக்கப்பட்ட ஆற்றலை அடைவோம் என்பது உங்களது கட்சியின் இலக்கு. இந்த இலக்கு எந்த அளவு யதார்த்தமானது மற்றும் அதை அதனை அடைய உங்கள் கட்சியின் செயல்திட்டங்கள் என்னவென்று சொல்ல முடியுமா ?**

**சமந்தா ரத்னம்:** நிலக்கரி, எரிவாயு மற்றும் எண்ணெயை நாம் தொடர்ந்து எரித்துக் கொண்டே இருந்தால், தணிக்க முடியாத காலநிலை மற்றும் பேரழிவை நோக்கிச் செல்கிறோம் என்பதை அறிந்து நமது பொருளாதாரத்தை புதுப்பிக்கப்பட்ட ஆற்றலுக்கு 100 சதவிகிதம் நகர்த்துவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அந்த மாற்றத்தின் சாத்தியக்கூறுகளைப் அறிந்துகொள்ள நாங்கள் நிறைய வேலைகளைச் செய்து வருகிறோம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை வல்லுநர்கள் மற்றும் காலநிலை நிபுணர்கள் இது சாத்தியம் என்று எங்களிடம் கூறுகிறார்கள். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான அரசாங்க கட்டமைப்பு மற்றும் வாய்ப்பு அவர்களுக்குத் தேவை. உதாரணமாக, நான் ஏழு வருடங்கள் விக்டோரியா நாடாளுமன்றத்தில் பணியாற்றியபோது 2030 ஆம் ஆண்டுக்குள் விக்டோரியா எவ்வாறு நூறு சதவீத புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு நகர முடியும் என்பது குறித்து நாங்கள் ஆய்வினை நடத்தினோம். அந்த நிபுணர் குழு ஆராய்ச்சியின் முடிவானது 100 சதவீதம் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு செல்ல முடியும் என்பதை நிரூபித்தது. ஆனால் அதைச் செயற்படுத்துவதற்கான கொள்கை மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குவது அரசாங்கமே.

**எதிரொலி: புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான லித்தியம் தேவையை கிரீன்ஸ் கட்சி ஆதரிக்கிறது இல்லையா ?. இந்த நிலைப்பாடு கனிமவள சுரங்ககளினால் ஏற்படும் காலநிலை மாசுபாடு கருத்திற்கு எதிரானது இல்லையா ?**

**சமந்தா ரத்னம்:** நமக்குத் தேவையான அத்தியாவசியப்பொருட்கள்சுரங்கங்கள்மூலமே கிடைக்கின்றன. சுற்றுச்சூழலுக்கு மாசுபடாமல் அவற்றை தோண்டியெடுக்க பல வழிகள் உள்ளன. முறையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் ,முறையான சுற்றுச்சூழல் தணிப்புகள் மற்றும் மறுசீரமைப்பு செய்யப்படுவதையும் உறுதி செய்வதே நாம் செல்லக்கூடிய வழி. ஆனால் ஆஸ்திரேலியாவில் சுரங்கத் தொழிலில் குறிப்பாக புதைபடிவ எரிபொருள் சுரங்கத்தில் உள்ள சிக்கல் என்னவென்றால், அது சுற்றுச்சூழலுக்கு மிகவும் தீங்கு விளைவிப்பதாகவும் இருக்கிறது, சுற்றுச்சூழல் விதிமுறைகள் மற்றும் பாதுகாப்புகள் உள்ளன. அந்த நிறுவனங்கள் அதைத் தவிர்க்க முயல்கின்றன. எனவேதான் சுற்றுச்சூழலின் தாக்கம் முடிந்தவரை குறைவாக இருப்பதை உறுதிசெய்ய சரியான சுற்றுச்சூழல் சட்டங்களை நாங்கள் விரும்புகிறோம்.

**எதிரொலி: நீங்கள் வில்ஸ் நாடாளுமன்ற வேட்பாளராக பரிந்துரைக்கப்பட்டிருக்கிறீர்கள். வாழ்த்துகள். ஒரு வேட்பாளராக எவ்வாறு அந்தத் தொகுதியிலுள்ள பல்வேறு சமூகங்களுடன் பங்கேற்று பிரதிநிதித்துவப்படுத்த திட்டமிட்டுள்ளீர்கள்?**

**சமந்தா ரத்னம்:** பத்தாண்டுகளுக்கும் மேலாக வில்ஸ் தொகுதி சமூகத்திற்கு சேவை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது. நான் முதலில் உள்ளூர் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டேன், அது மோர்லேண்ட் கவுன்சில் என்று அழைக்கப்பட்டது, இப்போது அது 2012 இல் மேரிபெக் கவுன்சில் என்று அழைக்கப்படுகிறது, நான் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சமூகத்தை அறிந்து சமூகத்திற்கு சேவை செய்துள்ளேன். மேலும் மக்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு உதவ முயற்சிப்பதே எனது அணுகுமுறை. பொதுமக்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் அவர்கள் சொல்லும் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிப்பது போன்ற அணுகுமுறையை நாங்கள் எடுத்து வருவதால் எங்களுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. மக்கள் உண்மையில் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி கவலைப்படுகிறார்கள். அவர்கள் பணவீக்கம் மற்றும் வீட்டு வசதியின்மை பற்றி அதிகம் கவலை கொள்கிறார்கள். தற்போது காசாவில் நடப்பது உண்மையில் மக்களை பாதிக்கிறது. அவர்கள் தங்கள் தலைவர்கள் தைரியமாகவும் இரக்கமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

**எதிரொலி: வீட்டு வசதியின்மை என்பது மக்களின் முக்கியமான கவலைகளில் ஒன்றாக நான் கருதுகிறேன், உங்கள் தொகுதியில் வீட்டு வசதி மற்றும் பொதுநல வீடுகளை எவ்வாறு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளீர்கள்?**

**சமந்தா ரத்னம்:** வீட்டு வசதியின்மையை சரிசெய்ய நாம் செய்யக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானது பொதுநல மற்றும் மலிவுவிலை வீட்டுமனைகளின் இருப்பினை அதிகரிப்பதாகும். ஆனால் அரசாங்கமோ இந்த விஷயத்தில் மிகவும் மெத்தனமாக இருக்கிறது. நாம் விக்டோரியா அரசாங்கத்தின் மக்கள்விரோத அணுகுமுறைகளை பார்த்து வருகிறோம் அல்லவா. விக்டோரியா மாகாணமானது பொது வீட்டுவசதி பராமரிப்புக்காக தொடர்ந்து மிகக் குறைந்த செலவு செய்யும் மாநிலங்களில் ஒன்றாகும். அதன் காரணமாக காத்திருப்புப் பட்டியல் வளர்ந்து வருகிறது. பொதுநல வீடுகளுக்கான காத்திருப்போர் பட்டியலில் 120,000 பேர் உள்ளனர். விக்டோரியா அரசாங்கம் அனைத்து பொதுநல வீடுகளையும் இடித்து தனியார் மயமாக்க முயல்கிறது. அது தவறான அணுகுமுறை என்று சொல்கிறோம். நீங்கள் அதிக பொதுநல வீட்டுவசதிகளை உருவாக்க வேண்டும். அது வாடகைச் சந்தையில் மற்ற தனியார் முதலாளிகளுக்கு அழுத்தத்தை கொடுக்கும். பொதுநல வீட்டுமனைகளை அதிகரிப்பதன் மூலம் வீடு வாடகைச் சந்தையில் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். அதன் பலனாக வீடு வாடகை குறையக்கூடிய வாய்ப்புகள் உருவாகும். பல வாடகைதாரர்கள் கடுமையான மன அழுத்தத்தில் இருக்கின்றனர், ஏனென்றால் அவர்கள் தங்கள் வருமானத்தில் 30 சதவீதத்திற்கும் மேலாக தங்கள் வாடகைக்கு செலுத்துகிறார்கள். இப்போது வரம்பற்ற வாடகை உயர்வுகள் இன்னும் சட்டபூர்வமானது. வரம்பற்ற வாடகை உயர்வை சட்டவிரோதமாக்க வேண்டும் அல்லது அதற்கு ஏதேனும் வரம்பினை ஏற்படுத்த வேண்டும்.

**எதிரொலி: உங்களது கட்சியானது பொதுநல வீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திவருகிறது. இதற்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது, இல்லையா? நாம் இவ்வாறு பொதுநல வீட்டு வசதிகளை அதிகரிக்கத் தொடங்கினால், பட்ஜெட் பற்றாக்குறை அதிகரிக்குமே . இதனை சமாளிப்பதற்கு உங்கள் கட்சியின் அணுகுமுறைகள் என்ன ?**

**சமந்தா ரத்னம்:** இது ஒரு நல்ல கேள்வி. பொதுவாக வரவு-செலவுத்திட்டங்கள் ஒரு அரசாங்கத்தின் அணுகுமுறைகளை பிரதிபலிக்கும். இப்போதுள்ள அரசாங்கங்கள் தனியார் கட்டண சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல், புதைபடிவ எரிபொருள் சுரங்க முதலீட்டாளர்களுக்கு மானியம் அளித்தல்



போன்ற மக்கள் விரோத பட்ஜெட்டினை நிறைவேற்றி வருகின்றன .அதுமட்டுமின்றி பகாசுர நில முதலீட்டாளர்களிடமிருந்து பில்லியன் டொலரை கையூட்டுகளாகப் பெறுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு மேலும் வரிச் சலுகைகள் அளித்து பற்றாக்குறையினை ஏற்படுத்தி வருகின்றனர். நாங்கள் ஆட்சிக்கு வருவதன் மூலம் இவ்விடயங்களை சரி செய்வதன் மூலம், மக்கள் நலத்தினை மேம்பாடு செய்வதற்கு தேவையான திட்டங்களுக்கு கூடுதல் நிதியினை ஏற்படுத்த முடியும். சமூகத்திற்கு எது முக்கியம்? வீட்டுவசதி என்பது மனித உரிமை என்று நாங்கள் நினைக்கிறோம், மக்களுக்கு மலிவு விலையில் வீடுகள் இருப்பதை உறுதிசெய்வதை அரசாங்கங்கள் தங்கள் பொறுப்பின் ஒரு பகுதியாகப் பார்க்க வேண்டும். புதைபடிவ எரிபொருள் முதலாளிகளுக்கு மானியமாக பணம் செல்வதை நாங்கள் விரும்பவில்லை. மலிவு விலையில் பொதுநல வீடுகளைக் கட்டுவதற்கு அந்த நிதி செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

**எதிரொலி: பெரிய கார்ப்ரேட் நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்வது கூட பட்ஜெட் பற்றாக்குறைக்கு ஒரு காரணம் தானே. கிரீன்ஸ் கட்சியானது நெகட்டிவ் கியரிங்கிற்கு எதிராக சில அளவீடுகளைச் செய்யவேண்டுமென குரல் எழுப்பியுள்ளது. ஆனால் இது முதலீட்டாளர்களைப் பாதிக்கும் என விமர்சகர்கள் கூறுகிறார்களே ?**

**சமந்தா ரத்னம்:** நெகட்டிவ் கியர் அறிமுகம் என்பது ஆஸ்திரேலிய வீட்டுக் கொள்கையில் ஒப்பீட்டளவில் சமீபத்திய மாற்றமாகும். இது ஹோவர்ட் அரசாங்கத்தால் சொத்து முதலீட்டாளர்கள் மானியங்கள் பெறும்படி அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு முன் இங்கே வீட்டு வசதியின்மை பிரச்சினை என்பது கிடையாது. மத்திய அரசு நெகடிவ் கியரிங் அறிமுகப்படுத்தியவுடன், வீட்டின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கின, மேலும் நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் மற்றும் ஒரு வீட்டின் விலை எவ்வளவு அதிகமாக நாளடைவில் குறைகிறது என்பதன் அடிப்படையில் இது கணக்கிடப்படுகிறது. நெகட்டிவ் கியரிங் அறிமுகப்படுத்தப்பட்டபிறகு வீட்டுவசதி என்பது மனித உரிமையாக இல்லாமல் முதலீட்டு சாதனமாகி விட்டது. இதனால் ஏற்படும் ஏற்படும் விளைவுகளைப் பார்க்கும்போது அரசுகள் செயற்பட வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. குறிப்பாக பல மக்கள் வீடற்ற நிலையை அனுபவிக்கும் போது கடுமையாக மன அழுத்தத்தை அனுபவிக்கின்றனர். அரசாங்கம் களத்தில் இறங்கவேண்டிய தருணம் இதுவாகும்.

**எதிரொலி: கொள்கைகள் அளவில் லேபர் மற்றும் லிபரல் கட்சிகள் இடையே எந்த வித்தியாசமும் காண முடியவில்லை. மூன்றாம் தரப்பாக வளர்ந்து வரும் உங்கள் கட்சி எவ்வாறு மாறுபடுகிறது ? எதிர்க்கட்சியாக இருந்து நீங்கள் என்ன செய்ய முடியும்?, எவ்வாறு மக்கள் பயனடையும் அளவில் ஆஸ்திரேலிய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் ?**

**சமந்தா ரத்னம்:** ஆமாம் எங்கள் கட்சி தொடர்ந்து பல ஆண்டுகளாக தங்கள் பிரதிநிதித்துவத்திலும் ஆதரவிலும் வளர்ந்து வருகின்றது. அரசாங்கத்தில் இல்லாவிட்டாலும், எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்த போதிலும், நாடாளுமன்றத்திலோ அல்லது உள்ளூராட்சியிலோ யோசனைகளை முன்வைக்க எங்களுக்கு ஒரு பெரிய தளம் உள்ளது, நாங்கள் மக்கள் சமூகத்துடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். நாங்கள் பார்ப்பது என்னவென்றால், மக்கள் மாற்று சிந்தனைகளை உண்மையில் விரும்புகிறார்கள். ஆதலால் அவர்கள் எங்களுக்கான ஆதரவையும், பிரதிநிதித்துவத்தையும் அளிக்கிறார்கள். எங்களது மாற்று சிந்தனைகள் மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதற்கான பொது விவாதம், வாழ்க்கைச் செலவு, வீட்டு வசதி அல்லது காலநிலை நடவடிக்கை பற்றியதாகும். பொது உரையாடலின் மூலம் கொண்டு வரப்பட்ட சில புதிய யோசனைகளின் மூலம் மாற்றத்தை நீங்கள் பார்க்க ஆரம்பிக்கிறீர்கள். நாங்கள் பெரும்பாலும் அதிகாரச் சமநிலையில் இருக்கிறோம், அதாவது சட்டம் இயற்றுவதற்கு அரசாங்கம் எங்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். எங்களின் தொடர்ந்த செயற்பாட்டால் மக்களுக்கு பயன்பெறும் நல்ல திட்டங்களை செனட் அதிகாரத்தின் மூலம் நிறைவேற்ற முடிந்தது. அதாவது மருத்துவ காப்பீட்டில் குழந்தைகளுக்கான பல் பராமரிப்பு, க்ளீன் எனர்ஜி ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் பல. இன்னும் வரும் காலங்களில் கூடுதலான பிரதிநிதித்துவம் மூலம் இன்னும் பல திட்டங்களை எங்களால் நிறைவேற்ற முடியும்.

**எதிரொலி: கடந்த காலங்களில் லேபர் கட்சியானது புலம்பெயர்ந்தோருக்கான தேர்வாக இருந்தது . ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் அவர்களின் தேர்வு கிரீன்ஸ் கட்சியை நோக்கி நகர்கிறது என்று நினைக்கிறேன்.உங்களின் எந்த விதமான கொள்கை மற்றும் சித்தாந்த மாற்றங்கள் இதற்கான காரணங்கள் என்று சொல்ல முடியுமா ?**

**சமந்தா ரத்னம்:** நமது சமூகத்தில் வாழும் பல்வேறு இனங்களின் குரல்களை நாங்கள் உண்மையாகக் கேட்க விரும்புகிறோம் மற்றும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த விரும்புகிறோம்.பசுமைவாதிகளின் அழுத்தம் காரணமாக அரசாங்கம் பல்வேறு இனங்களின் பிரச்சினைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ளத் தொடங்குகிறது. விக்டோரியா நாடாளுமன்றத்தில், தீவிர வலதுசாரி தீவிரவாதத்தின் எழுச்சி குறித்து நாடாளுமன்ற விசாரணைக்கு நாங்கள் தலைமை தாங்கினோம், ஏனென்றால் அந்த தீவிர வலதுசாரி தீவிரவாதிகள், நமது பன்முக கலாசார சமூகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளனர். இரு பெரும் கட்சிகளும் மிகக் கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான சட்டங்களை இயற்றுவதற்கு எதிராக ஆஸ்திரேலியாவில் புகலிடம் மற்றும் தஞ்சம் கோரும் மக்களுக்கு ஆதரவாக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம்.

உலகம் முழுவதும் உள்ள சிறுபான்மை சமூகங்களுக்காக குரல் கொடுக்க நாங்கள் பயப்படவில்லை. உலகம் முழுவதும் அதாவது காஸாவில் பாலஸ்தீனியர்களாக இருந்தாலும் சரி, ரோஹிங்கியாக்களாக இருந்தாலும் சரி, இலங்கையில் போர் நடக்கும் போது தமிழர்களாக இருந்தாலும் சரி, அந்த சமூகங்களுக்காக ஆதரவு குரல் கொடுக்க பசுமைவாதிகள் பயப்படவில்லை.

**எதிரொலி: லேபர் ஃ லிபரல் கூட்டணியால் தற்போது நிறைவேற்றப்பட்ட குடிவரவு சட்ட திருத்தமானது கிட்டத்தட்ட 80,000 பேரை பாதிக்கப்போகிறது என்று படித்தேன். இதனால் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் ஏதிலிகள் அதிகளவில் பாதிக்கப்படுவார்கள். அப்படியானால் அவர்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து வெளியேறுவதைத் தடுக்க உங்களுக்கு என்ன வழிமுறைகள் உள்ளன?**

**சமந்தா ரத்னம்:** சமீபத்தில் தொழிற்கட்சியானது, தாராளவாதிகளின் ஆதரவுடன் இயற்றிய சட்டங்கள் முற்றிலும் அழிவுகரமானவை. இந்த பெரிய கட்சிகள் மக்களை அழிக்கும் சட்டங்களை இயற்றுவதை என்னால் பார்த்துக் கொண்டு நிற்க முடியாது. தஞ்சம் தேடிவரும் வரும் மக்களுக்கு ஆதரவு அளிப்பதற்கு பதிலாக இந்த அரசாங்கம் இவர்களை நாடு கடத்த பாதைகளை உருவாக்கப் போகின்றது. தஞ்சம் கோருவோர் மற்றும் அகதிகளை அழைத்துச் செல்ல அவர்கள் மற்ற நாடுகளுக்கு பணம் செலுத்தப் போகிறார்கள். மக்கள் தடுப்புக்காவலில் மொபைல் போன் வைத்திருப்பதை அவர்கள் மறுக்கப் போகிறார்கள். இந்தச் சட்டங்கள் காட்டுமிராண்டித்தனமும் கொடூரமும் கொண்டவை. இந்தச் சட்டங்களைப் அமுல்படுத்தக் கூடாது என்று முடிந்தவரை அரசை வற்புறுத்தப் போகிறோம்.இவை மனிதாபிமானமற்றவை, இந்த சட்டங்களை மாற்ற வேண்டும். மேலும் நாங்கள் நாடாளுமன்றத்தில் எங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை என்றென்றும் காவலில் அடைத்து வைப்பதிலிருந்து தடுப்போம். மக்கள்விரோத சட்டங்களுக்கு எதிராக நாங்கள் இறுதிவரை களத்தில் போராடுவோம்.

**எதிரொலி: இலங்கையில் இனப்படுகொலை நடந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டன. இலங்கை அரசியலையும் தற்போதைய சூழ்நிலையையும் திரும்பிப் பார்க்கும்போது ஒரு அரசாங்கமாக மற்றும் கட்சியாக உங்களால் என்ன செய்ய முடியும் ?**

**சமந்தா ரத்னம்:** முதலாவதாக புகலிடம் கோரி வந்த இந்த மக்கள் 12 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வந்தவர்கள் என்பதை நாம் புரிந்துகொண்டு நம்ப வேண்டும் . அவர்கள் குழப்பத்தில் உள்ளனர், தங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முடியவில்லை, மேலும் அவர்களில் பலர் இலங்கைக்கு திரும்பினால் துன்புறுத்தப்படுவார்கள் என்ற கவலையிலுள்ளனர்.எனவே தஞ்சம் கோரியவர்களை நாம் கவனித்து, அவர்கள் அவுஸ்திரேலியாவில் ஸ்திரத்தன்மையுடன் நிம்மதியாக வாழ்க்கையைத் தொடங்குவதை உறுதி செய்ய வேண்டும். இலங்கையில் என்ன நடக்கிறது என்பதைக் கண்காணித்து, இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அனுபவங்களைப் புரிந்து கொள்ள வேண்டிய சர்வதேச மனித உரிமைக் கடமைகள் எமக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன்.சமீபத்தில் ஆட்சி மாற்றம் நடந்தது. ஆனால் மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச அரங்கில் நமது சக்தியையும் குரலையும் பயன்படுத்த வேண்டும். 2009 நடந்த இன அழிவு போரின் முடிவில் நடந்த வரலாற்று அநீதிகளுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை. கடந்த 30 வருடங்கள் மற்றும் தமிழ் மக்கள் அனுபவித்த இழப்புகள் மற்றும் துன்பங்கள் ஒருபுறம் இருக்கட்டும். நமக்கு வரலாற்று நிவாரணம் தேவை, அதற்கு சர்வதேச அரங்கில் நமது நிலைப்பாட்டை உறுதி செய்ய வேண்டும். இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை கண்காணித்து, தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும்.ஆஸ்திரேலிய அரசாங்கம் அதைச் செய்ய முடியும், ஆனால் அவர்களுக்கு அதில் விருப்பமில்லை.

**எதிரொலி: 15 வருடங்கள் ஆகிவிட்டது. இரண்டாம் தலைமுறை மற்றும் மூன்றாம் தலைமுறை இங்கே வாழ்கிறது. அவர்களுக்கு அதே அளவு தாக்கமோ அல்லது அதே அளவு கவலையோ இருக்காது. ஒரு புலம்பெயர்ந்த சமூகமாக நாம் என்ன செய்ய முடியும்? நமது கடந்த கால வாழ்க்கையை / துயரத்தை நாம் எவ்வாறு அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்ல முடியும் ?**

**சமந்தா ரத்னம்:** ஆமாம், இது ஒரு நல்ல கேள்வி. நாம் இன்னும் செய்யக்கூடியது நிறைய இருக்கிறது என்று நினைக்கிறேன். முதலாவது, அந்த வரலாற்றை நாம் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும், அந்த வரலாற்றை இந்த அடுத்த தலைமுறையினருக்கும், இரண்டாவது மற்றும் மூன்றாம் தலைமுறையினருக்கும் வாழ வைக்க வேண்டும். காசாவில் என்ன நடக்கிறது என்பது குறித்த உங்கள் குறிப்பு அந்த வரலாற்றை உயிர்ப்புடன் வைத்திருக்கும் முயற்சிக்கு மிகவும் பொருத்தமானது என்று நான் நினைக்கிறேன். தமிழர் இன விடுதலை போராட்டம் உட்பட ஏனைய பிரச்சினைகளுக்கு முழுமையான அங்கீகாரம் வழங்கப்படவில்லை .அது மட்டுமின்றி நியாயமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி வழங்கப்படவில்லை. இந்த வரலாற்றினை நாம் எடுத்துச் செல்ல வேண்டும். பாலஸ்தீனர், உக்ரைன் மற்றும் ஏனைய சமூகத்தினர் பாதிக்கப்படும்போது நாம் அவர்களுக்காக திரள்கிறோம் இல்லையா? எங்கள் இனத்திற்கு அழிவு நடந்தது. வேறு எந்த சமூகமும் அந்த அளவு துன்பத்தை அனுபவிக்கக்கூடாது என்பதை உறுதி செய்ய நாம் அந்த மக்களோடு ஒன்றிணைந்து போராடுகிறோம். எனவேநாம்மற்றவர்களின்போராட்டங்களுடன் இணைவது முக்கியம் என்று நான் நினைக்கிறேன். இப்படி ஒருங்கிணைந்து போராடுவதன் மூலம் நமது கடந்த கால துயர வரலாற்றினை உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும்.

**எதிரொலி: ஆமாம். ஹோலோகாஸ்ட் எனப்படும் யூத இனப்படுகொலை 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. ஆனால் இன்னும் அதைப்பற்றிய கதைகள், கட்டுரைகள் மற்றும் ஆவணப்படங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன., நம் எந்த இனப்படுகொலையையும் இன்னோர் இனப்படுகொலையுடனும் ஒப்பிட முடியாது.இனப்படுகொலை என்பது இனப்படுகொலை தான். 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இனப்படுகொலை நடந்தது. அந்தத் தமிழ் இனப்படுகொலைகள் சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட்டு , அந்த துயர வரலாறு வருங்கால சந்ததியினருக்குக் கொண்டு செல்ல முடியும் என்று நினைக்கிறீர்களா?**

**சமந்தா ரத்னம்:** ஆமாம், நீங்கள் சொல்வது சரிதான் என்று நினைக்கிறேன்.அந்த வரலாற்றை ஆவணப்படுத்த இன்னும் நிறைய செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். எனவே நமது சமூகம் அனுபவித்த துன்பம் மற்றும் போராட்டம் மற்றும் இழப்புக்கு இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. தமிழர்கள் இன்னும் பாகுபாடுகளை அனுபவித்து வருகின்றனர். இலங்கைக்கு திரும்பிச் செல்ல பயப்படும் தமிழர்கள் பலர் உள்ளனர். கடந்த கால வரலாற்றினை குறிப்பாக துயரத்தை பகிர்ந்து கொள்வதில் நமக்கு சங்கடங்கள் இருக்கின்றன. 2009ல் இப்போதிருக்கிற சமூக ஊடகங்களும் உலகளாவிய ஊடகங்களும் இருக்கவில்லை. 1983ல் இலங்கையில் நடந்த கலவரத்தை நான் நேரில் அனுபவித்திருக்கிறேன்.அவற்றையெல்லாம் நாம் இன்னும் ஆவணப்படுத்த வேண்டும்.வருங்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லவேண்டும்.நாம் அதைப் பற்றி தொடர்ந்து பேசுவதும், பகிர்ந்து கொள்வதும் மிக முக்கியம் என்று நினைக்கிறேன், குறிப்பாக புதிய தலைமுறையினருடன். ஆவணப்படுத்துவதில் நமக்குள்ள அக்கறையின்மையை நாம் கலையவேண்டும்.

**எதிரொலி: ஆனால் நாம் அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் சொல்ல வேண்டும் இல்லையா ?**

**சமந்தா ரத்னம்:** ஆம், உண்மைதான். அதற்கான தேவை இருக்கிறது, அந்தச் சவாலை நம் சமூகம் எதிர்கொள்ள இருக்கிறது. சில சிறந்த புதிய எழுத்தாளர்கள் இங்கே இருக்கிறார்கள். எழுத்தாளர் சங்கரி சந்திரனின் chai time in cinnamon gardens படித்திருக்கிறீர்களா ? அதே போன்று நாம் மற்ற கலை வடிவங்களையும் பயன்படுத்தவேண்டும்.அதே போன்று நமது கடந்த கால துயர வாழ்க்கையை திறம்பட சொல்லிய கவுண்டிங் மற்றும் கிராக்கிங் நாடகத்திற்கு சிறந்த நாடகம் என ஆஸ்திரேலிய ஊடகங்கள் பாராட்டுகிறன. இதுபோன்ற மற்ற வடிவங்களில் நாம் நமது வரலாற்றினை எடுத்துச் செல்ல வேண்டும்.


**எதிரொலி: ஆமாம், இக்கலை வடிவங்கள் இப்போதைய தேவை என்று நினைக்கிறேன். நாம் எல்லாவற்றையும் தமிழில் எழுதி, நமக்குள்ளே பேசிக் கொண்டிருந்தால் நமக்கு என்றுமே உதவப் போவதில்லை. ஆஸ்திரேலிய மக்கள் நம்மைப் புரிந்துகொள்ளும் வகையில், வருங்கால சந்ததியினர் நாடகம், கதை , நாவல்கள் போன்ற பிற வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.**


**இறுதியாக ஒரே ஒரு கேள்வி. எதிர்வரும் ஆஸ்திரேலியா தினம் கொண்டாட்டத்திற்கு ஆதரவு அளிப்பதில்லை என்பது கிரீன்ஸ் கட்சியின் நிலைப்பாடு . இந்த நிலைப்பாடு ஆஸ்திரேலியர்களில் சிலருக்கு பிரிவினையாகவோ அல்லது அவமரியாதையாகவோ பார்க்கப்படலாம் என்ற கவலையை நீங்கள் எவ்வாறு சரிசெய்யப்போகிறீர்கள்?**

சமந்தா ரத்னம்: இது பூர்வகுடி மக்களிடமிருந்து நேரடியாக வந்த கேள்வியாகும். வலியிலும் துன்பத்திலும் பிறந்தது, ஏனெனில் ஜனவரி 26 என்பது காலனித்துவத்தின் நாளைக் குறிக்கிறது. அவர்கள் எங்களிடம் கேட்கிறார்கள். எங்கள் சமூகங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை இந்த அப்பட்டமான வழியில் ஒவ்வொரு ஆண்டும் நினைவுபடுத்த வேண்டுமா என்று? ஆஸ்திரேலியாவில் நிறையப் பேர் வேண்டாம் என்று சொல்லும் நாளை நாம் எல்லோரும் ஏன் கொண்டாட வேண்டும்? ஆஸ்திரேலிய என்பது பல்வேறு கலாசார சமூக எனினும் பூர்வகுடி மக்கள் தான் இந்த மண்ணின் மைந்தர்கள் என்பதை மறக்கக்கூடாது. அவர்களின் கோரிக்கையை நிராகரித்து இந்த நாளை நாம் தேசிய தினமாக கொண்டாடுவது அவர்களை அவமதிப்பதாகும். ஆனால் இந்த பிரச்சினையை அரசியல் ஆயுதமாக பயன்படுத்துபவர்களுக்கு நம்மிடையே உண்டு.

**எதிரொலி: ஆமாம், நன்றி. நாம் நமது மூதாதையர்களின் குரலை என்றும் நிராகரிக்கக்கூடாது. நீங்கள் வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் வில்ஸ் தொகுதியில் வெற்றி பெற எதிரொலி சார்பாக வாழ்த்துக்கள்.**

Where there's WILLS, there's a way.




வடக்கு பரமட்டா


கலைஞரின் கருத்துப்பதிவு

## வடக்கு பரமட்டாவின் உருமாற்றத்தில் உங்கள் கருத்தைக் கூறுங்கள்

தற்போது பொதுமக்கள் கண்காட்சிக்கு என உள்ள, வடக்கு பரமட்டாவின் மறுசீரமைப்பு விண்ணப்பத்தில் உங்களது கருத்தை NSW அரசாங்கம் வரவேற்கிறது.

குறிப்பிடத்தக்க பிராந்தியமான வடக்கு பரமட்டா, அடுத்த 30 ஆண்டுகளுக்கு:

- 42 ஹெக்டேர் நிலத்தை, பசுமையான நடைபாதைகள், திறந்த பொது வெளிகளால் இணைக்கப்பட்ட செழிப்பான சுற்றுப்புறமாக மாற்றப்போகிறது
- கல்வி, ஆராய்ச்சி, வணிகம், கலாச்சாரம் மற்றும் வீட்டுவசதியை வழங்கப்போகிறது.

**10 பிப்ரவரி 2025 ஆம் தேதிக்குள் உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்.** மேலும் அறிய QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.
nsw.gov.au/parramatta-north

NSW GOVERNMENT




CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# யாழ்ப்பாணத்தை அழிக்கும் வியாபாரிகள்

● ஜெ.பிருந்தாபன்

புவிச்சரித வரலாற்றுக் காலத்தில் ஏறத்தாழ இருபத்தைந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிலவியதாகக் கருதப்படுகின்ற மயோசீன் காலத்தில் யாழ்ப்பாண குடாநாடு கடல் பகுதியிலிருந்து மேலுயர்த்தப்பட்டதாக புவிச்சரிதவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். கடல் பகுதியினுள் படிவான பல்வேறு அடையல்களும் ஆழமற்ற பகுதிகளிலிருந்த உயிரினங்களும், சேதனவுறுப்புக்களும், மேலுயர்த்துகையின் பின் கரைசல்பட்டு இறுகிச் சுண்ணாம்புக் கற்களாயின. இவ்வாறு தோன்றிய சுண்ணாம்புக் கற்பாறை குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளிலில் வேறுபட்ட தன்மையுடையதாகவும், வெவ்வேறு ஆழத்திலிலும் காணப்படுகின்றது. இதுவரை குடாநாட்டின் பல பகுதிகளின் மேற்பரப்பிலும், ஆராய்ச்சிக்காக இடப்பட்ட துளைகளின் மூலமும், குழாய்க்கிணறுகளை அமைப்பதற்குத் துளையிடப்பட்டபோது பெறப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டும் இங்கு காணப்படுகின்ற சுண்ணாம்புக் கற்பாறையினை முருகைக் கற்பாறைத் தன்மைகொண்ட சுண்ணாம்புக் கற்பாறை என்றும், மக்கித் தன்மையுடைய உலர்ந்த சுண்ணாம்புக் கற்பாறை என்றும், மணல் தன்மை கூடிய வைரச் சுண்ணாம்புக் கற்பாறை என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

குடாநாட்டின் வடபகுதியில் சுண்ணாம்புக் கற்பாறைகள் உயர்த்தப்பட்ட நிலையில் தெற்காகவும், தென்மேற்காகவும் சாய்ந்து காணப்படுகின்றன. இப்பாறைகள் குடாநாட்டின் சில பாகங்களில் ஏறத்தாழ 350 அடி தொடக்கம் 450 அடி ஆழம்வரை அமைந்துள்ளதாக அறியமுடிகின்றது. இவை தோன்றிய முறையில் வெவ்வேறு அடையல்களாகவும், இதில் அமைந்துள்ள உயிரின சேதனவுறுப்புக்களின் காரணமாக இடத்துக்கிடம் வேறுபட்ட சேர்க்கையினால் வேறுபட்ட அளவில் நுண்துளைமையைக் கொண்டுள்ளவையாகவும், அதற்கேற்ப நீரை உட்புகவிடக்கூடிய தன்மையுடையனவாகவும் இருக்கின்றன. அத்துடன் நீரில் கரையும் தன்மையைக் கொண்டிருப்பதனால், குடாநாட்டின் மேற்பரப்பின் கீழ் இப்பாறைகள் கரைந்து, மூட்டுகளும், வெடிப்புகளும், பிளவுகளும் தோன்றியுள்ளன. அத்துடன் நீர்தேங்கி நிற்கக்கூடிய குகைளையும், இடைவெளிகளையும் கொண்டமைந்துள்ளன. ஊடுபுகவிடக்கூடிய சுண்ணாம்புக் கற்பாதையினூடாக நீர் கீழ் நோக்கி கசிந்து, இத்தகைய இடைவெளிகளுனூடே தேங்கி, நீர்கொள்படுக்கையாக அமைந்துள்ளன. கிட்டத்தட்ட ஒரு தேன்கூட்டைப்போன்றே யாழ்ப்பாணத்தின் நிலக்கீழ் பாகம் அமைந்திருக்கின்றது. அத்தகைய தேன்கூடு முழுவதும் நீர் நிரம்பியிருக்கிறது. சுண்ணாம்புக்கற்கள் அத்தேன்கூடாகிய நீர்க்கூட்டைத் தாங்கிவைத்திருக்கின்றன. இந்தக்கூடுகள் ஒன்றோடு ஒன்று மிக நீண்ட தொடர்புடையவை. இதனால்தான் கீரிமலையில் போடப்படும் தேசிக்காய் தொண்டைமனாற்றில் மிதக்கிறது. அந்தளவிற்கு விரைவான நீரோட்டத்தையும் இயற்கையான முறையில் இந்த சுண்ணக் கற்கள் நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாண நிலத்திற்கு இயற்கை அளித்த பெருங் கொடைதான் இந்தச் சுண்ணக்கற்கள். இந்தச் சுண்ணக்கற்கள் இல்லாவிடின், நிலக்கீழ் தளக்கோளத்தில் சிதைவு ஏற்பட்டால் விரைவாகவே கடல் நீர் உள்நுழைந்துவிடும். இதனால் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீருக்கு உப்புத்தன்மை ஏற்படுவதுடன், நிலத்தின் மேற்படையும் உவர்த்தன்மையாகிவிடும். எனவேதான் யாழ்ப்பாணத்தின் உயிர்க்கோளம் நிலைத்திருக்கவேண்டுமாயின் சுண்ணாம்புக்கற்களின் இருப்பு மிக அவசியம் என்கிற விடயம் வலியுறுத்தப்படுகின்றது.

ஆனால் யாழ்ப்பாணத்தின் கள நிலமையோ வேறானதாக இருக்கின்றது. பெரு வணிக மாபியாக்கள், கல்லுடைக்கும் ஆலைகளின் உரிமையாளர்கள், கனிமவள வியாபாரிகள் யாழ்ப்பாணத்தின் உயிர்மூச்சையே விற்றுப் பணமாக்குவதற்குத் தம்மால் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதனையெல்லாம் செய்கின்றனர். அதற்காக அவர்கள் செய்யும் திருக்கூத்துக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சுண்ணக்கல் வளமுள்ள காணிகளை விலைக்கு வாங்கி, அந்தக் காணியில் எவ்வளவு ஆழத்திற்கு சுண்ணக்கற் படைகள் உள்ளனவோ அதனை அகழ்ந்து விற்பனைசெய்வது.

2. தம் காணிகளை விட்டு புலம்பெயர்ந்திருக்கின்றவர்களின் காணிகளை அடையாளம் கண்டு, அந்தக் காணிகளில் எவ்வித அனுமதியுமின்றி சுண்ணக்கல் அகழ்வது.

3. விவசாயிகளைத் தொடர்புகொண்டு, சுண்ணக்கல் அகழவேண்டிய காணிகளைத் தமக்குத் தந்தால் தாம் இலவசமாக அந்தச் சுண்ணக்கற்களை அகழ்ந்து காணியைப் பண்படுத்தித் தருவதாகவும் கூறி, அங்கே தம் கைவரிசையைக் காட்டுவது. விவசாய நடவடிக்கைகளுக்காக இரண்டரை அடி வரை சுண்ணக்கற்களை அகழலாம் என்பதற்கு அனுமதியுள்ளபோதிலும், வியாபாரிகள் பெருங்குழிகளை ஏற்படுத்தி அகழ்வுசெய்கின்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

4. அண்மை நாட்களாக வீதிகள், பொது இடங்கள் போன்றவற்றில் படிந்திருக்கின்ற சுண்ணக்கற்களை இரவோடிரவாக அகழும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன.

5. இவ்வாறு அகழப்படும் சுண்ணாம்புக்கற்களை முழுமையாக வீதியில் வாகனங்களில் எடுத்துச்செல்லமுடியாது. எனவே அதனை அயலில் உள்ள ஆலைகளுக்கு அனுப்பி, அங்கு சல்லியாக அல்லது மாவாக மாற்றி, திருகோணமலை சீமெந்து தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்கின்றனர்.



இவ்வாறு சட்டவிரோதமான முறையில், யாழ்ப்பாணத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்விற்கு எதிராக சுற்றுச்சூழல்சார்ந்தவர்களும், மக்களும் நீண்டகாலமாகவே குரல்கொடுத்துவருகின்றனர். சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திவருகின்றனர். ஆனால் உரியதரப்பினர் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களில் கலந்துகொள்ளும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் கொடுத்த நெருக்குவாரங்களின் காரணமாக, வேறு வழியே இல்லாமல் அவர்கள் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை நிறுத்துவதற்கான தீர்மானங்களை நிறைவேற்றிய போதிலும், அவை நடைமுறைக்கு வந்ததில்லை.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சாவகச்சேரி, வேம்பிராய் மக்கள் பலமுறை முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். மக்களின் முறைப்பாட்டுக்கு அமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் சுண்ணக்கற்கள் அகழப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். அவர் அவ்விடங்களைச் சென்று பார்வையிட்டபோதும், எதுவித நடவடிக்கைகளுக்கும் எடுக்க முடியாதவராக இருந்தார். எனவேதான் கொதிப்படைந்த பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த சில வாரங்களாகவே தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். மாற்றத்தை ஏற்படுத்துவார்கள், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பார்கள் என நம்பி வாக்களித்த தேசிய மக்கள் சக்திகூட இதுவிடயத்தில் தம் பக்கம் இல்லை என்பதை சுட்டிக்காட்டினர். விடயம் இளங்குமரனின் காதுக்குப்போகவே, வேறு வழியே இல்லாமல் களத்தில் குதித்தார் அவர். கடந்தவாரம், நுணாவில் பகுதியில் சல்லியாக்கப்பட்ட சுண்ணக்கற்களை (கண்டக்கல் அல்லது வெள்ளைச்சல்லி என்கின்றனர்) ஏற்றிப் பயணித்துக் கொண்டிருந்த, “சிற்றி ஹார்ட்வெயார்” வணிக குழுமத்திற்குரிய கனரக வாகனமொன்றை வழிமறித்து, அதனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார் அவர்.

ஆனால் மறுநாளே பொலிஸ் நிலையத்தை நாடியது குறித்த “சிற்றி ஹார்ட்வெயார்” வணிக நிலையம். முறைப்பாட்டின் பின்னர் ஊடகங்களை சந்தித்த குறித்த வணிக நிலையத்தின் உரிமையாளர், 68 வருட பாரம்பரியமுடைய தமது வணிக நிறுவனத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக சமூக வலைதளத்தில் கருத்தினைப் பதிவிட்டமைக்கு எதிராகவே நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதாகவும், வெள்ளைச்சல்லி எடுத்துச்செல்வதற்கு வாகன அனுமதி பெறத்தேவையில்லை எனவும், கடந்த காலத்தில் இந்த விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எதனையும் அறிந்திராத நாடாளுமன்ற உறுப்பினர் அவற்றைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

குறித்த வணிக உரிமையாளர் குறிப்பிட்ட வெள்ளைச் சல்லிக்கு வாகன அனுமதி பெறத்தேவையில்லை என்கிற விடயம்கூட தவறானது என்பதை உறுதிப்படுத்தும், கனிமவளத் திணைக்களத்தின் கடிதம் ஒன்றினையும் சமூக வலைதளங்களில் பகிர்ந்திருந்தனர். இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்துவெளியிட்ட யாழ்ப்பாண பொலிஸார், குறித்த சுண்ணாம்புக்கல் அகழ்வு விடயம் தம்மோடு சம்பந்தப்பட்டதல்ல எனவும், கனிமவளத் திணைக்கள அதிகாரிகளே அதற்குப் பொறுப்பானவர்கள் எனவும், அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தமது எதிர்கால நடவடிக்கைகள் அமையும் எனவும் தெரிவித்தனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தை அழிக்கும் வியாபாரிகள்

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியாக கையுமெய்யுமாகப் பிடித்துக்கொடுக்கப்பட்ட சட்டவிரோத நடவடிக்கை ஒன்று குறித்து பொறுப்புச் சொல்லவேண்டிய, நடவடிக்கை எடுக்கவேண்டிய அனைத்து தரப்பினரும், ஆளையாள் விரல்சுட்டிக்காட்டி விலகிக்கொண்டிருக்க, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், இது விடயத்தில் யாழ். மாவட்ட அரச அதிபரும், பிரதேச செயலாளரும் பதில் தரவேண்டும் எனக் குறிப்பிட்டு நழுவிவிட்டார்.

இதே சந்திரசேகரன், ரணில்விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்விற்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்டு, தாம் பொன்னாவெளியிலிருந்து ஒரு துண்டு சுண்ணக்கல்லைக்கூட எடுத்துச்செல்ல அனுமதிக்கமாட்டோம் எனத் தெரிவித்திருந்தமையை அனைவரும் நன்கு நினைவுவைத்திருக்கின்றனர்.

வணிக மாபியாக்களிடம் சிக்கிச் சின்னாபின்னமாகிக்கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தாம் பொறுப்புச்சொல்லவேண்டிய அனைத்து விடயங்களையும் அரச அதிகாரிகளின் தலையில் கட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்றது. அப்படியானதொரு நிலையெடுப்பையே யாழ்ப்பாணத்தில் அகழப்படும் சுண்ணக்கல் விடயத்திலும் தேசிய மக்கள் சக்தி எடுத்திருக்கிறது என்பதற்கு கடற்றொழில் அமைச்சரின் கூற்று தகுந்த சான்றாகும்.

இந்த விடயத்தில் மக்களின் பக்கம் நின்று, உண்மைகளை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. ஆனால் இந்த விடயத்தில் ஊடக நிறுவனங்கள் கண்டும் காணாதபோக்கினையே கடைபிடிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் ஆழக்கால் பதித்திருக்கும் வணிக நிறுவனமொன்றை பகைக்கும் விதமாக செய்தி வெளியிட்டால், விளம்பரம் கிடைக்காது போகும் என்கிற ஒரே காரணத்தினால்தான் யாழ்ப்பாண ஊடகங்கள் இப்படியொரு மென்மைப்போக்கை கடைபிடிக்கின்றன என்பதை மக்கள் அறியாமல் இல்லை.

வடக்கு, கிழக்கு பாகங்களில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத வளச்சுரண்டல்களுக்கு எதிராக செய்திசேகரிப்பில் ஈடுபடும், சமூக வலைதளங்களில் எழுதிவரும் ஊடகவியலாளர்களைத் தாக்கி அச்சுறுத்தும் போக்கொன்றும் உருவாகிவருகின்றது. அண்மை வாரங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் எழுதிவந்த ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் இனந்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்குள்ளானார். அவர் சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்பில் அடையாளப்படுத்திய போதிலும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். அதேபோல மட்டக்களப்பின், சம்மாந்துறையில் சட்டவிரோத மணல் அகழ்வினை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரும் மணல் அகழ்பவர்களால் தாக்கப்பட்டு, அவரின் தொழில் உபகரணங்களும் பறித்துச்செல்லப்பட்டுள்ளன. எனவே வடக்கு, கிழக்கின் மொத்த வளங்களையும் சூறையாடிக்கொண்டிருக்கும் இந்த வணிக மாபியாக்கள் குறித்து ஊடகங்களும் வெளிப்படுத்துவதில்லை. அதனை செய்தியாக்க முனையும் ஊடகவியலாளர்களுக்கு உயிரச்சுறுத்தல் ஏற்படுத்தும் நிலையும் உருவாகியிருக்கிறது. மறுபுறத்தில் சுற்றுச்சூழலை காப்பாற்றவேண்டிய இடத்தில் இருக்கின்ற துறைசார் அரச அதிகாரிகள் இதுவிடயத்தில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை. எனவே பொதுமக்கள் குறிப்பிடுவதுபோல, இந்த அரச அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனங்களிடம் கையூட்டைப் பெற்றுக்கொண்டு அமைதிகாக்கின்றனர் என்பதில் உண்மையிருப்பது உறுதியாகின்றது. அதேபோல நாட்டில் தமிழ் மக்கள் எங்கே போகின்றனர், யாரோடு தொடர்பு வைத்திருக்கின்றனர் என்பதைக் கவனிப்பதிலேயே தம் முழுக்கவனத்தையும் வைத்திருக்கின்ற புலனாய்வுத்துறையினர், இராணுவத்தினர், பொலிஸார் இந்த சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வு விடயத்தில் கடுகளவு கரிசனையும் காட்டுவதில்லை. கவனிப்பதுமில்லை.

தமிழ் தேசிய அரசியல்வாதிகள் நிலைமையோ சொல்லவே தேவையில்லை. தமிழ் மக்களுக்கும், தமிழர் நிலத்திற்கும் ஆபத்து நேரும்போது முதலில் களத்தில் நிற்கவேண்டியதும், குரல்கொடுக்கவேண்டியதும் தமிழ்த் தேசியக் கட்சிகள்தான். சுண்ணக்கல் அகழ்வென்பது தமிழர்கள் செறிந்துவாழும் யாழ்ப்பாண நிலத்தையே பாழாக்கும் நடவடிக்கை. எனவே தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள்தான் இதுவிடயத்தில் முதலில் களத்தில் இறங்கியிருக்கவேண்டும். தடுத்து நிறுத்தப் போராடியிருக்கவேண்டும். ஆனால் இவ்வளவு பிரச்சினைகள் நடந்துள்ளபோதிலும், எந்தவொரு தமிழ்த் தேசிய அரசியல்கட்சிகளும் இதுவரையில் ஒரு துண்டுப்பிரசுரம் கூட வெளியிடவில்லை. எனவேதான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல்கட்சிகளை தமிழ் மக்கள் நிராகரித்தமையே சரியென்றாகிறது.

போர் முடிவுற்ற காலத்திலிருந்தே யாழ்ப்பாணத்தின் கனிமவளங்களான மணல், சுண்ணாம்புக்கற்கள் போன்றன சட்டவிரோதமான முறையில் அகழப்பட்டுத் தெற்கிற்கு கொண்டுசெல்லப்படுகின்றன. சட்டவிரோதமான முறையில் வடமராட்சி கிழக்கு பகுதியிலிருந்தும், பூநகரியின் கௌதாரிமுனையிலிரும் மணல் ஏற்றிச்செல்லப்படுகின்றது என்கிற குற்றச்சாட்டுக்கள் இன்றும் குறைந்தபாடில்லை. மக்கள் இன்றும்கூட இந்த சட்டவிரோத மணல் அகழ்விற்கு எதிராகப் போராட்டங்களை நடத்திவருகின்றனர். இவ்வாறு சட்டவிரோதமாக மணல் கடத்தியவர்கள் தொடர்பில் சமூக வலைதளங்களில் பதிவிட்ட ஒருவர் கூட இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம்கூட வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிலவருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து கனிமவளங்களை அள்ளிச்செல்வது என்ப நன்கு திட்டமிட்ட வகையில், அதிகாரமிக்கவர்களின் மெய்ப்பாதுகாப்புடன் இடம்பெற்று வருகின்றது. அதனை யாராலும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை. சட்டவிரோத கனிமவள அகழ்வுக்கு எதிரான பொலிஸ் முறைப்பாடுகள், திணைக்களங்கள் ரீதியான நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகள், பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் என எதனாலும் இந்த சட்டவிரோத கனிமவள கடத்தல்காரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்படியாயின் இதற்குப் பின்னால் மிகப் பலமானதொரு தரப்பு உள்ளதென்று தானே அர்த்தம். அந்தத் தரப்பினரின் அழுத்தம்தான் பலரையும் மௌனிக்கச்செய்திருக்கிறது. இந்த விடயத்தை கண்டுங்காணாமல் கடந்துபோகச் செய்திருக்கிறது. இந்நிலைமை நீடிக்கத்தான் போகிறது. யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர்வளமும், இயற்கை யாழ்ப்பாணத்திற்கு அளித்த அருங்கொடையும் அழிக்கப்படத்தான் போகிறது.



# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# அகம், புறம், சங்க(ம)ம்

## சாந்த விறகின் உவித்த புன்கம்[பொங்கல்]

நண்பர் பிரசாந்தன் என்னிடம் பேசிகொண்டிருக்கும்போது "இந்தியா செல்லும்போது சென்னை வழியாகத் தானே வருவீர்கள்? சென்னை எப்படி இருக்கு?" என்று கேட்டார். நான் அதற்கு "சென்னைக்குச் செல்லும் வாய்ப்பே இல்லை. நான் அங்கு செல்லத் தேவையில்லை" என்று சொன்னேன் அவர் அதற்கு "ஏன் சென்னையின் மேல் அப்படி ஒரு வெறுப்பு?" என்று கேட்டார் . நான் "அப்படி எல்லாம் இல்லை. தென் தமிழகத்தில் வாழ்பவர்களுக்கு அது வேறு ஒரு நாடு போலதான்" என்று கூறிவிட்டு, சென்னை எவ்வாறு தமிழ்நாட்டின் ஒரு பகுதியானது என்பது குறித்தும் பேசினேன். சென்னைக்காக ஆந்திர மக்கள் "மெட்ராஸ் மனதே" மற்றும் மா.பொ.சி அவர்கள் மெட்ராஸ் நமதே என்றும் போராட்டம்செய்தனர். இன்றும் சென்னையில் லட்சக்கணக்கான தெலுங்கு மக்கள் வாழ்கின்றனர். கடந்த 30-40 ஆண்டுகளாக தான் தமிழகத்தின் மற்ற பகுதிகளிலிருந்து மக்கள் சென்னைக்கு குடியேறி அது கொஞ்சம் கொஞ்சமாக தமிழ் பேசும் நிலமாக மாறியிருக்கிறது என்றெல்லாம் பேசினேன். இதற்காக சென்னையின் மேல் ஒவ்வாமை எல்லாம் கிடையாது என்றில்லை. சென்னை இல்லையென்றால் தமிழ்நாடு இந்த அளவுக்கு வளர்ந்திருக்குமா என்று தெரியவில்லை. ஒரு வேளை எல்லா நகரங்களும் சரிசமமாக வளர்ந்திருக்கும். ஆனால் சென்னை தமிழகத்தின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கிறதா இல்லை பிரதிநிதித்துவம் செய்கிறதா என்று என்னிடம் கேட்டால் 'இல்லை' என்றே சொல்வேன். தமிழகத்தின் ஆன்மா ஏனைய சிறு ஊர்களில் தான் பத்திரமாக இருக்கிறது.அப்போது அவர் "தமிழ்நாட்டிற்கு ஒருவேளை சென்னை கிடைத்திருக்காவிட்டால் மதுரை தானே தலைநகரம் ஆகியிருக்கும் . உங்களுக்கு சந்தோசம் தானே?" என்றார் . அதற்கு நான் "இல்லை நாங்கள் மிகவும் வருத்தப்பட்டிருப்போம். எங்கள் மதுரை என்றும் மண் மணக்கும் ஊர். எவ்வளவு மாற்றங்கள் வந்தாலும் இன்றும் தனது பல்லாயிரம் வருட கலாசாரத்தை காத்துவரும் நகரம். தலைநகரம் ஆகியிருந்தால் இதுவெல்லாம் பாழாகியிருக்கும்" என்று பதில்மொழி கூறினேன்.

என் மனதில் தமிழர் பெருமையும், நாம் பல்லாயிரம் வருடங்களாக காத்து வரும் கலாசார பெருமை மிகுந்த பண்டிகைகளும் ஞாபகத்திற்கு வந்தன. அதில் தலையாயது பொங்கல் பண்டிகையாகும். இப்போதும் தமிழக சுற்றுலாத்துறை பொங்கல் பண்டிகையை ஒட்டி வெளிநாட்டினரைக் கூட்டி வந்து மதுரையில் கொண்டாடுவது வழக்கம். இந்தத் தமிழர் திருநாள் எப்போது ஆரம்பிக்கப்பட்டது, யாரெல்லாம் கொண்டாடினர் என்று எந்த ஆவணங்களும் நம்மிடம் இல்லை. தமிழ்த்தாத்தா புண்ணியத்தில் அவர் நமக்காக தெருவெல்லாம் தேடித் திரிந்து கண்டெடுத்த தமிழின் பொக்கிஷமான புறநானூற்றில் தேடினேன். கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் அவர்கள் சேரமான் கோதைக்குப் படைத் துணைவனான பிட்டங்கொற்றனை பற்றி பாடிய புறநானுற்றின் 168 ஆவது பாடல் கிடைத்தது. இந்தப் பாடலானது சங்க காலத்தில் மக்கள் மக்கள் எவ்வாறு பொங்கல் பண்டிகையை கொண்டாடியிருப்பார் என்று கூறுகிறது.

அருவி ஆர்க்குங் கழைபயில் நனந்தலைக்
கறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தள்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கண் கேழல் உழுத பூழி

நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரல் சிறுதினை
முந்துவிளை யாணர் நாள்புதிது உண்மார்
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி

வான்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளம் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகல்இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ, கூர்வேல்

நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும,
கைவள் ஈகைக் கடுமான் கொற்ற,
வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்

பாடுப என்ப பரிசிலர் நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே.

**பாடியவர்:** கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார். "தமிழகம்" என்ற சொல்லை முதல் முறையாக இலக்கியத்தில் பயன்படுத்தியது இவர்தான் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

**பாடப்பட்டோன்:** பிட்டங்கொற்றன்.இவன் சேரமான் கோதைக்குப் படைத் துணைவன்.

**பாட்டின் பின்னணி:** தமிழகம் முழுதும் பிட்டங்கொற்றனின் புகழ் பேசப்படுவதைக் கண்ட புலவர் கருவூர்க் கதப்பிள்ளை அதனைக் காண வந்தபோது எழுதப்பட்ட இப்பாடலானது மக்கள் எவ்வாறு அறுவடை சமயத்தில் புதுநெல் கொண்டு பொங்கல் செய்து பண்டிகை கொண்டாடுவர் என்பதைச் சொல்கிறது.

**திணை:** பாடாண் திணை. ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் ஆகிய நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது.

**துறை:** பரிசில் துறை் பரிசில் துறை: புரவலன் முன் இரவலர் தாம் பெற விரும்பியது இது எனக் கூறுதல்.

**அருஞ்சொற்பொருள்:**

ஆர்த்தல் = ஒலித்தல் பயிறல் = கூடுதல் நனம் ஸ்ரீ அகற்சி நனந்தலை = அகன்ற இடம். கறி = மிளகு; அடுக்கம் = மலைப்பக்கம், மலைச் சாரல். மிளிர்தல் = புரளுதல், மேலாதல் கிளை = இனம், கூட்டம். கடுங்கண் = குரூரம், கொடுமை; கேழல் = பன்றி பூழி = புழுதி. பதம் = சமயம். பரூஉ = பருமை; குரல் = கதிர், தினை. முந்து = பழைமையான (முன்னர்) யாணர் = புது வருவாய். மரையா = காட்டுப் பசு; தீ = இனிமை. தடி = தசை; புழுக்கல் = அவித்தல் குழிசி = பானை. வான் = அழகு; கேழ் = நிறம் புடை = பக்கம்.சாந்தம் = சந்தனம் உவித்தல் = அவித்தல் புன்கம் = சோறு ( பொங்கல்) கூதளம் = வெள்ளரி, கூதாளிச் செடி; குளவி = காட்டு மல்லிகை; முன்றில் = முற்றம். கோள் = குலை; பகுத்தல் = ஈதல், பங்கிடுதல். நறை = பச்சிலைக் கொடி. வடி = கூர்மை; நவிலல் = பழகுதல். வள் = வளம்கடு = விரைவு; மான் = குதிரை. நெளிதல் = வருந்துதல். வீதல் = கெடுதல்.



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

**விளக்கம் :**

ஓயாது விழும் அருவிகள் ஒலிக்கும், மூங்கில் மரங்கள் அடர்ந்த அகன்ற வனத்தில் வளரும் மிளகுக் கொடிகள் படர்ந்த மலைப்பக்கத்தில் காட்டுப் பன்றிகள் தன் இனத்தோடு, காந்தளின் வளமான கிழங்குகளைத் தோண்டியெடுப்பதற்காகக் கிளறிய நிலத்தில் தோன்றிய புழுதியில், நல்லநாள் வந்த சமயம் பார்த்துக் உழவர் உழாமல் விதைத்து விளைந்த பெரிய கதிரையுடைய சிறுதினையைப் புது வருவாயாகப் பெற்று அதைப் புது உணவாக உண்ணுவர்.

காட்டுப் பசுவிடம் கறந்த நுரையுடன் கூடிய இனிய பாலில் மான் தசையை வேகவைத்த புலால் மணமுள்ள அழகிய நிறமுள்ள பானையின் வெளிப்புறத்தைக் கழுவாமல் உலைவைத்து, சந்தன விறகால் சமைத்த சோற்றை (பொங்கல்) வெள்ளரி சிறந்து வளரும் , காட்டு மல்லிகை மணக்கும் முற்றத்தில் வளமான குலையையுடைய வாழையின் அகன்ற இலையில் இட்டுப் பலரோடும் பகிர்ந்து உண்ணும், ( இங்கு எவ்வாறு அப்பொழுது அறுவடை சமயத்தில் பொங்கல் பண்டிகை கொண்டாடினர் என்று புலவர் கூறுகிறார் ) குதிரைப்படைத் தலைவனே! கூர்மையான வேலையும், பச்சிலைக் கொடியுடன் தொடுத்த வேங்கை மலர் மாலையையும் அணிந்து கூரிய அம்பைச் செலுத்துவதில் பயிற்சி பெற்ற வீரர்களுக்குத் தலைவனே! கையால் வழங்கும் ஈகையும் விரைந்து பாயும் குதிரைகளையும் உடைய வீரனே! உலகத்து எல்லையுள், தமிழகம் முழுதும் கேட்க, இரவலர்க்குப் பரிசளிக்காத மன்னர்கள் நாள்தோறும் வெட்கப்படுமாறு உன் பழியற்ற புகழினைப் பற்றி பொய் பேசாதே ! நடுவு நிலை தவறா நன்மக்கள் தங்கள் நாக்கு வருந்துமாறு உன்னை புகழ்ந்து பாடுவர்.

மெல்பேர்னில் உங்கள் அபிமான வானொலி சேவை
32 YEARS OF SERVICE
சங்கநாதம்
3MDR 97.1FM
3MDR 97.1 fm mountain district radio
பிரதி ஞாயிறுதோறும் காலை 8 மணிமுதல் 10 மணிவரை கேட்டு மகிழலாம்
SANGANATHAM TAMIL COMMUNITY BROADCAST FM 97.1 ON SUNDAY 8AM TO 10AM
www.sanganatham.net.au
sanganatham@gmail.com
vtca sanganatham

# விசாவுக்காக காத்திருந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

ஆஸ்திரேலியா வருவதற்காக விசாவுக்கு விண்ணப்பித்து காத்திருந்த பெற்றோரில் சுமார் 2 ஆயிரத்து 300 விண்ணப்பதாரிகள் இறந்துவிட்டனர் என உள்துறை அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியாவுக்கு தங்கள் பெற்றோரை அழைத்து வர விரும்பும் புலம்பெயர்ந்த குடும்பங்களால் தாக்கல் செய்யப்பட்ட விசா விண்ணப்பங்களுக்கு அனுமதி கிட்டுவதில் காலதாமதம் நீடிக்கின்றது.

இந்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளில் பெற்றோர் விசாவுக்காக காத்திருந்தவர்களில் 2,300 பேர் உயிரிழந்துவிட்டனர்.

வருடாந்த பெற்றோர் விசா எண்ணிக்கையை 4,500 இல் இருந்து 8,500 ஆக அதிகரிப்பதற்கு லேபர் அரசு, 2023 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுத்தது. இதனையடுத்து விசா விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்தது.

# இங்கிலாந்து செல்ல முன் அனுமதி அவசியம்




இங்கிலாந்தில் விசா நடைமுறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள நிலையில், அங்கு செல்லவேண்டுமாயின் ஆஸ்திரேலியர்கள் முன் அனுமதி பெறவேண்டும் என்ற திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஜனவரி 8 ஆம் திகதி முதல் இந்தத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இங்கிலாந்தின் மின்னணுப் பயண அனுமதியைப் பெற வேண்டிய நாடுகளின் பட்டியலில் ஆஸ்திரேலியாவும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இங்கிலாந்துக்குச் செல்பவர்கள் மாத்திரமே மின்னணுப் பாதுகாப்பு அனுமதியை பெற வேண்டிய இருந்தது.

புதிய ஏற்பாடுகளின் பிரகாரம் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர், கனடா, நோர்வே உள்ளிட்ட நாடுகளில் இருந்து வருபவர்களும் மேற்படி அனுமதியை பெற வேண்டும்.

இதற்கான கட்டணமாக 20 ஆஸ்திரேலிய டொலரைச் செலுத்த வேண்டும். இரு வருடங்களுக்கு இந்தப் பயண அனுமதி செல்லுபடியாகும்.

# சிறைகளில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

ஆஸ்திரேலியா, குயின்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ள சிறைச்சாலைகளில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.


கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி 2023 - 2024 ஆம் நிதியாண்டில் மாத்திரமே சிறைச்சாலைகளில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

நியூ சவூத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள சிறைச்சாலைகளில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். அதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் குயின்ஸ்லாந்து உள்ளது.

குயின்ஸ்லாந்து சிறைச்சாலைகளில் உயிரிழந்த 19 பேரில் ஐவர் பூர்வகுடி மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் மேற்படி காலப்பகுதியில் 24 பூர்வகுடி மக்கள் உட்பட 104 பேர் உயிரிழந்துள்ளனர் என புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.



# கொதிக்கும் இஸ்ரேல் ஐஸ்; வைக்கும் ஆஸி.

இஸ்ரேலுடன் ஏற்பட்டுள்ள இராஜதந்திர விரிசல்களை சீர்செய்வதற்குரிய நடவடிக்கையில் ஆஸ்திரேலிய அரசு இறங்கியுள்ளது.

இதன்ஓர் அங்கமாக ஆஸ்திரேலிய சட்டமா அதிபர், இரு தரப்பு கலந்துரையாடலுக்காக விரைவில் இஸ்ரேல் செல்லவுள்ளார்.

ஒரு வாரகாலம் இஸ்ரேலில் தங்கி இருக்க திட்டமிட்டுள்ள அவர், அந்நாட்டு ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இஸ்ரேல், ஹமாஸ் போர் விவகாரத்தில் ஆஸ்திரேலியா கடைப்பிடித்த அணுகுமுறை இஸ்ரேலை சினம் கொள்ள வைத்துள்ளது.

குறிப்பாக பாலஸ்தீனத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இஸ்ரேல் படைகள் வெளியேற வேண்டும் எனவும், இரு நாடுகள் தீர்வுத்திட்டம் ஏற்கப்பட வேண்டும் எனவும் ஆஸ்திரேலியா வலியுறுத்தி வருவதுடன், அது தொடர்பான ஐ.நா. தீர்மானங்களையும் ஆதரித்து வருகின்றது.

மறுபுறத்தில் ஆஸ்திரேலியாவுக்குள் யூத விரோத சம்பவங்களும் தலைதூக்கியுள்ளன. அண்மையில்கூட மெல்பேர்னில் யூத வழிபாட்டு தலம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் கடும் விரிசல் ஏற்பட்டது. அதனை சீர் செய்யும் விதமாகவே யூத சமூகத்தை சேர்ந்த சட்டமா அதிபரை, அல்பானீஸி அரசு, இஸ்ரேலில் களமிறக்கவுள்ளது.

# வன்முறைச் சிறார்கள் கைது!

மெல்பேர்ணில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டுவந்த 12 வயது சிறுவர் உட்பட மேலும் சில சிறார்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடு உடைப்பு, ஆயுதமேந்திய கொள்ளைகள், கார்க்கொள்ளை உட்பட மேலும் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டுவந்தவர்களை கைது செய்வதற்குரிய விசேட பொலிஸ் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி 40 பேர்வரை கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் வயதில் உள்ளவர்களாவர்.

கடந்த ஒரு வாரகாலத்துக்குள் கைது செய்யப்பட்டவர்கள், 150 இற்கு மேற்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

19 வயதுக்குட்பட்ட அறுவரில் 12 வயது சிறுவன் ஒருவரும் இருந்துள்ளார். புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் இவர் தொடர்புபட்டுள்ளார்.




# சீன இராணுவத்துக்கு பயிற்சியளித்தவரை நாடு கடத்த முடிவு

சீன இராணுவத்துக்கு சட்டவிரோதமாக உதவினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் விமானியை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதற்கு ஆஸ்திரேலியா ஒப்புதல் அளித்துள்ளது.

அவர் அமெரிக்கா சென்ற பிறகு அங்கு சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும்.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் 60 ஆண்டுகள்வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அமெரிக்க போர் விமானியாக பணியாற்றிய 56 வயதுடைய ஆஸ்திரேலிய குடும்பஸ்தர் டேனியல் டுக்கன் என்பவரே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளார்.

சீன இராணுவத்துக்கு சட்டவிரோதமாக பயிற்சியளித்தார் என்ற குற்றத்துக்காக அவர் ஏற்கனவே இரு வருடங்கள் சிறைத்தண்டனையை எதிர்கொண்டிருந்தார்.

இந்நிலையிலேயே அவரை நாடு கடத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

'நாங்கள் ஆஸ்திரேலிய அரசால் கைவிடப்பட்டதாக உணர்கின்றோம். ஆஸ்திரேலியக் குடும்பத்தை பாதுகாப்பதில் அரசு தவறிழைத்துள்ளமை குறித்து கவலை அடைகின்றோம்."- என்று டேனியலின் மனைவி தெரிவித்துள்ளார்.

2010 க்கும் 2012 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தென்னாபிரிக்காவில் உள்ள சீன விமானிகளுக்கு பயிற்சி அளித்த குற்றச்சாட்டு தொடர்பில் அமெரிக்காவின் உத்தரவின் பிரகாரம் ஆஸ்திரேலியாவில் டேனியல் டுக்கன் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுவருட ராசி பலன் - 2025



## மேடம்

மேஷ ராசியினருக்கு இந்த ஆண்டு தொடக்கம் சிறப்பாக இருக்கும் என்றாலும், ஏப்ரல் மாதத்தில் ஏழரைச் சனி தொடங்குவதால் உங்கள் வாழ்க்கையில் பல மாற்றங்களை உணரலாம். ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தொல்லைகள் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதியற்ற சூழல் இருக்கும். பணியிடத்தில் கசப்பான அனுபவங்களைச் சந்திக்க வாய்ப்புள்ளது. இந்த ஆண்டில் ஆரோக்கியத்தில் மிகவும் கவனமாக இருக்கவும்.

## கடகம்

கடக ராசியை சேர்ந்தவர்களுக்கு அஷ்டமத்துச் சனி விலக உள்ளது. இதனால் பல பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். உத்தியோகத்தில் பிரச்சினைகள் இருந்தாலும் அதை தீர்க்க வழி கிடைக்கும். கடினமாக உழைப்பது, திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் வெற்றி அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முடிவுகள் எடுப்பதில் குழப்பம் இருக்கும். அதனால் யோகா, தியானம் போன்ற விஷயங்களில் ஆர்வத்தை அதிகரிக்கவும். உங்கள் வாழ்க்கைத் துணையுடன் புரிதல் சிறப்பாக இருக்கும்.

## துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு இந்த வருடம் சாதகமான பலன்கள் கிடைக்கும். முதல் பகுதி சாதகமாகவும், பின்னர் மகிழ்ச்சி, செழிப்பானதாகவும் அமையும். குழந்தைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். பணவரவு சிறப்பாக இருக்கும் என்பதால் கடன் பிரச்சினை குறையும். திருமண வாழ்க்கையில் இனிப்பும் – கசப்பும் நிறைந்து இருக்கும். ஆன்மீகத்தில் ஆர்வம் அதிகரிக்கும். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

## மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு இந்த ஆண்டு செல்வம் பெருகக்கூடிய சூழல் சாதகமாகவும் இருக்கும். பணியிடத்தில் அபரிமிதமான முன்னேற்றத்தை காணலாம். உங்களின் மரியாதை அதிகரிக்கும். உங்களின் திட்டமிட்ட காரியங்கள் எளிதாக நிறைவேறும். காதல் வாழ்க்கையில் நெருக்கம் அதிகரிக்கும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். ராகுவின் பெயர்ச்சியாலும் உங்கள் செல்வம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது கடின உழைப்பிற்கான அங்கீகாரம், நற்பலனை பெறுவீர்கள்.

## இடபம்

ரிஷப ராசி அன்பர்களுக்கு இந்த ஆண்டு தொடக்கத்தில் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் சிறப்புகள் நிறைந்த தான சூழ்நிலை இருக்கும். உங்களின் மரியாதை அதிகரிக்கும். ஆரோக்கியம் முன்னேற்றம் அடையும். பயணம் மூலம் அனுகூலமான பலன்களைப் பெறுவீர்கள். பணியிடத்தில் நல்ல சூழல் உருவாகும். குடும்ப பொறுப்புகளை நிறைவேற்றுவதில் கவனம் தேவை. திருமண வாழ்க்கையில் கசப்பும், இனிமையும் கலந்து இருக்கும்.

## சிம்மம்

சிம்ம ராசியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த புத்தாண்டு தொடக்கம் அதிர்ஷ்டம் நிறைந்ததாக இருக்கும். உங்களின் கடின உழைப்பின் மூலம் சூழலை மேம்படுத்திக் கொள்ளலாம். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. சிலருக்கு வெளிநாட்டு பயணங்கள், பணவரவு கூடுதல் போன்ற விஷயங்கள் நடக்கும். ஏப்ரல் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு அஷ்டமத்துச் சனி ஆரம்பிப்பதால் எதிலும் கவனம் தேவை. உடல் நிலையில் கவனம் செலுத்தவும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு மனநிம்மதி தரக்கூடிய ஆண்டாக அமையும். வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும். வேலையை சிறப்பான வெற்றியைப் பெறலாம். தொழிலில் வளர்ச்சியை எதிர்பார்க்கலாம். பெப்ரவரி முதல் மே மாதம் வரை உங்களுக்கு பல விதத்தில் சிறப்பான பலன்கள் கிடைக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு ஏற்ற வெற்றி கிடைக்கும். திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும்.புதிய வாகன யோகம் உண்டு.

## கும்பம்

கும்ப ராசியைச்ச் சேர்ந்தவர்களுக்கு இந்த ஆண்டு ஓரளவு முன்னேற்றம் தரக்கூடியதாக அமையும். வாழ்க்கையில் மரியாதை அதிகரிக்கும். பணியிடத்தில் கசப்பு – இனிமையான அனுபவங்கள் இருக்கும். ஏப்ரல், மே மாதங்களில் பிரச்சினைகள் அதிகரிக்கலாம். அதே சமயம் உங்களின் முன்னேற்றம், செல்வ நிலை அதிகரிக்கும். நீங்கள் முதலீடுகள் மூலம் நிறைய நன்மைகளை பெறுவீர்கள். இந்த ஆண்டில் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும்.

## மிதுனம்

மிதுன ராசியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த ஆண்டு சிறப்பானதாக அமையும். வாழ்க்கையில் குழப்பங்கள் ஏற்பட்டாலும் பின்னர் மகிழ்ச்சி உருவாகும் . உங்கள் கடின உழைப்பால் நிறைய சாதிக்க முடியும். நிதிநிலை சிறப்பாக இருக்கும். ஏப்ரல், மே மாதங்கள் சற்று கடினமானதாக அமையும். நிதி இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த ஆண்டின் பிற்பகுதியில் உங்களுக்கு சாதகமானதாக இருக்கும். திருமணம், குழந்தைப்பேறு போன்ற சாதகப் பலன்களை எதிர்பார்க்கலாம்.

## கன்னி

கன்னி ராசியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த புத்தாண்டு சிறப்பான பலன்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். மரியாதை கூடும். திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்திருக்கும். திருமணத்துக்கான வாய்ப்புகள் அமையும்.

ஆண்டின் முதல் பகுதியில் செல்வ வளர்ச்சி நல்ல சிறப்பாக இருக்கும். ஒக்ரோபர் மாதத்தில் சிரமங்கள் ஏற்படும். ஏப்ரல், மே மாதத்தில் வாகன பயன்பாட்டில் கவனம் தேவை.

## தனுசு

தனுசு ராசியினருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும், செழிப்பும் நிறைந்த வாய்ப்புகள் கிடைக்கும். புதிய சொத்து வாங்குதல், வீட்டைப் பராமரிப்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திருமண போன்ற சுப வாய்ப்புகள் உண்டாகும். ஊடகம், வணிகம், வர்த்தகம் செய்யக்கூடியவர்களுக்குச் சிறப்பான வாய்ப்புகள் கிடைக்கும். உங்களின் நிதிநிலை முன்னேற்றம் அடைய வாய்ப்பு உள்ளது. ஆரோக்கியம் சீராக இருக்கும். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இனிப்பு – கசப்பு நிறைந்த அனுபவங்கள் தரக்கூடியதாக இந்த ஆண்டு அமையும். சனி பகவான் உங்கள் ராசிக்கு பெயர்ச்சியாவதால் உங்கள் செயலிலும், ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் தேவை. கடின உழைப்பால் மட்டுமே வேலை முன்னேற்றத்தை அடைய முடியும். திருமணத்திற்கான வாய்ப்புகள் உண்டு. உடல் நிலை பிரச்சினையில் படிப்படியாக முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். ராகுவின் அமைப்பால் உங்களின் அலைச்சல் அதிகரிக்கும்.


VICTORIA
Tamil Heritage Month
தமிழர் திருநாள்
Tamil Festival Australia
FREE ENTRY
தமிழர் திருநாள்
ஆஸ்திரேலியா 2025
THE TAMIL FESTIVAL
AUSTRALIA
18 JANUARY 2025 | SATURDAY
8:30 AM ONWARDS
CAULFIELD RACECOURSE,
CAULFIELD EAST,
VIC 3145
THE GRAND THAI PONGAL CELEBRATION
OF THE TAMIL VICTORIANS
Tamil Victorians & Multiple Tamil Community Organizations Celebrating
A FESTIVAL FOR EVERYONE
www.tamilfestival.org.au
vanakkam@tamilfestival.org.au

Transco™ CARGO

=




ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU